ழக வெளியீடு : அஅங்

கவிராச பண்டாரத்தையர்

இயற்றிய

திருவிலஞ்சி முருகன் பிள்ளைத்தமிழ்

பேராசிரியர், பெருநாவலர்,

திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார்

எழுதிய

அரும்பொருள் விளக்கத்துடன்

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி. :: சென்னை - 1.

திருநெல்வேலித் தென்னிந்திய

First Edition: May, 1957.

THIRUVILANJI MURUGAN PILLAITH THAMIZH

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C.—1200

பதிப்புரை

தமிழ்மொழியில் உள்ள தொண்ணூற்ருறுவகைச் சிற்றிலக்கிய நூல்களுள் பிள்ளைத்தமிழ் என்பதும் ஒன்று. பிள்ளைத் தமிழ் என்னுஞ்சொல் பிள்ளையைப்பற்றிய தமிழ் என்று விரியும். பிள்ளைத்தமிழ் நூல்கள் பிள்ளையாகப் பிறந்ததாகக் கதை வழங்கும் தெய்வங்கள்மீதும் பெரியோர்கள்மீதும் பாடப்பெறும். முன்னேர்கள் தெய்வத் திருவருளையும் பெரியோர்களின் அருளை யும் பெறுதற்கு இதனையும் ஒருவழியாகக் கைக்கொண்டுள்ளனர்.

ஆனைமுகக்கடவுள், முருகக்கடவுள், உமையவள் ஆகியோர் பிள்ளையாகப் பிறந்ததாக வழக்குண்மையின் இவர்கள்மீது பெரும்பான்மையாகப் பாடப்பட்டுள்ளன. சிவபெருமான் எக் காலத்தும் யாண்டும் பிள்ளையாகப் பிறந்தார் என்னும் வழக்கா றின்மையின் சிவபெருமான்மீது பிள்ளைத்தமிழ் பாடும் வழக்கம் இல்லை.

பிள்ளைத்தமிழ் பெற்ற கடவுளர்களுள் முருகக்கடவுள் முதன்மையானவர். இவர்மீது எண்ணற்ற பிள்ளைத்தமிழ் நூல்கள் பாடப்பெற்றுள்ளன. பிள்ளைத்தமிழ் முதலிய சிறு நூல்களை அரும்பதஉரை ஆராய்ச்சி முன்னுரை முதலியவைக ளோடு வெளியிட எண்ணி இதுவரை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ், திருமலை முருகன் பிள்ளைத்தமிழ், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ் முதலியவைகளை வெளியிட்டோம்.

இப்பொழுது திருவிலஞ்சி என்னும் பதியின்கண் எழுந் தருளிய முருகக் கடவுள்மீது, கவிராசபண்டாரத்தையா என்னும் அருந்தமிழ்ப் புலவரால் இயற்றப்பெற்ற திருவிலஞ்சி முருகன் பிள்ளைத்தமிழைப் புலவர் திருமிகு. பு. சி. புன்னைவனநாத முதலி யார் அவர்களைக்கொண்டு அரும்பொருள்விளக்கம் முன்னுரை முதலியன எழுதச்செய்து வெளியிடுகின்றேம்.

இந்நூற்குப் பொருட் குறிப்பு எழுதியுதவிய உயர்திரு. இராவ்பகதூர், தணிகைமணி, வ. சு. செங்கல்வராயபிள்ளை, எம். ஏ, அவர்கட்கு எம் நன்றி யுரித்தாகும். இப் பிள்ளைத்தமிழ் நூலைத் தமிழ்உலகம் கற்றுணர்ந்து பயனடையவேண்டும் என்று விரும்புகிறேம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முன்னுரை

இஃது, இலஞ்சியில் திருக்கோவில் கொண்டிருக்கும் குமார சுவாமிமீது பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ். இதனைப் பாடியவர் தென்காசியை அடுத்த செங்கோட்டையில் வாழ்ந்துவந்த மகா வித்துவான், கனம் கவிராச பண்டாரத்தையா அவர்கள். இலஞ்சிநகர், திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், திருக்குற்ருலத்தை அடுத்து உள்ளது.

பிள்ளைத்தமிழ் என்பது தமிழ்மொழியிலுள்ள தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பிள்ளைத்தமிழ் ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரு வகைப்படும். அவற்றுள் ஆண்பாற் பிள்ளைத்தமிழில் காப்பும், செங்கீரையும், தாலும், சப்பாணியும், முத்தமும், வருக என்றலும், அம்புலியும், சிற்றிலும், சிறுபறையும், சிறுதேரும், அறிஞர் தெளிந்த மற்றவையும் சுற்றத்தளவாக வைத்துப் பாடுதல் வேண்டும் என்று தெய்வத்தன்மையினை உடையவர்களாகிய நன்மையினைக்கொண்ட புலவர்கள் கூறினுர்கள்.

காப்பாவது பாட்டுடைத் தலைவனை, திருமால் முதலிய தெய்வங்கள் காக்குமாறு வேண்டிக்கொள்ளுதல். **செங்கீரைப் பருவமாவது** பிள்ளை ஒருகாலை முடக்கி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றித் தலைநிமிர்த்து முகம் அசைத்தாடும் நிலை. **தாலப்பருவமாவது** பிள்ளையைத் தொட்டிலிற் கிடத்தி மாதர் நாவசைத்துப் பாடும் நிலை. **சப்பாணிப்பருவமாவது** பிள்ளை கையுடனே கை சேர்த்துக் கொட்டும் நிலை. **முத்தப்பருவமாவது** பிள்ளையினது வாய் முத்தத்தை விரும்பிக்கூறும் நிலை. **வருகைப்பருவமாவது** பிள்ளையை நடந்து வருக என்று அழைக்கும் நிலை. **அம்புலிப் பருவமாவது** பாட்டுடைப் பிள்ளையுடன் விளையாட வரும்படி பெண்டிர் அப் பிள்ளையை ஒக்கலையில் இருத்திவைத்துக்கொண்டு அம்புலியை (சந்திரனை), சாம, பேத, தான, தண்டங்களால்

கூறி அழைக்கும்நிலை. **சிறுபறைப்பருவமாவது** பாட்டுடைப் பிள்ளையைச் சிறுபறை கொட்டும்படி வேண்டும் நிலை. **சிற்றிற் பருவமாவது** சிற்றில் இழைக்கும் சிறுமியர்தம் சிற்றிலைச் சிதைக்க வேண்டாம் என்று பாட்டுடைக் குழவியை வேண்டும் நிலை. **சிறு தேர்ப்பருவமாவது** பாட்டுடைப் பிள்ளையைச் சிறுதேர் உருட்டும் படி வேண்டும் நிலை.

பெண்பாற் பிள்ளைத்தமிழ் ஆயின், இறுதி மூன்று பருவங் களுக்கு ஈடாக **அம்மானை, நீராடல், ஊசல்** என்ற மூன்றும் சொல்லப்படும். **அம்மானைப்பருவமாவது** பாட்டுடைப் பெண் பிள்ளை பலநிற அம்மனையை எடுத்து, மாறி மாறி எறிந்து ஆடுதலைக் கூறும் நிலை. **நீராடற்பருவமாவது** தலைவி புதிய வெள்ளநீர் ஆடுதலைக் கூறும் நிலை. **ஊசற்பருவமாவது** தலைவி பொன் மணிகளால் செய்யப்பட்ட ஊசலில் இருந்து மகிழ்ந்து விளையாடலைக் கூறும்நிலை.

இப் பருவங்களுள், காப்புப் பருவம், பிள்ளைபிறந்த மூன்றும் திங்கள்வரை கூறப்படும். ஏனைய ஒன்பது பருவங்களும் அம் மூன்றும் திங்கள் தொடங்கி, ரு, எ, கூ, கக, கந, கரு, கஎ, ககூ, உக-இவ் ஒற்றை எண் கொண்ட திங்கள்களில் முறையே கூறப் படுவன என்றும், மூன்று, ஐந்து, ஏழு, ஆண்டுவரையும், சொல்லுதலும் கொள்வர் என்றும் பன்னிரு பாட்டியலிற் கூறுவர். இவற்றுள் பன்னிரு பாட்டியலிலே ஆண்பாற்குப் பதினாறு வயதுவரையும், பெண்பாற்குப் பூப்பு நிகழும் அளவும் பிள்ளைப் பருவம் கொள்ளலும் உண்டு என்று சொல்லப்படு கிறது. பிங்கலந்தையில் அடியில் வரும் சூத்திரத்தால் இதனைக் கண்டுகொள்க;

“பிள்ளைப் பாட்டுத் தெள்ளிதின் கிளப்பின்,
திங்கள் இரண்டில் தெய்வம் காக்கென,
இன்தமிழ்ப் புலவர் இயம்பிய காப்பும்,
ஐந்தாம் திங்களில் செங்கீரை ஆடலும்,
ஆறும் திங்களில் கூறுதல் கற்றலோடு,
ஏழாம் திங்களின் இன்னமு தூட்டலும்,
எட்டாம் திங்களின் இயல்தா லாட்டலும்,
ஒன்பதாம் திங்களில் உயர்சப் பாணியும்,

பத்திளுேடு ஒன்றில் முத்தம் கூறலும்,
ஆண்டுவரையின் ஈண்டுவரு கென்றலும்,
மதியீரொன்பதில் மதியை அழைத்தலும்,
இரண்டாம் ஆண்டில் சிறுபறை கொட்டலும்,
மூன்ரும் ஆண்டில் சிற்றில் சிதைத்தலும்,
நான்காம் ஆண்டில் சிறுதேர் உருட்டலும்,
பத்தில் பூண் அணி பன்னீ ராண்டினில்
கச்சொடு சுரிகை காமுறப் புனைதல்என்று,
இன்னவை பிறவும் ஆகும் அவற்றுள்,
முன்னர் மொழிந்த ஒழிந்தவற் ருேடும்,
பெற்ற ஆண்பாற் பிள்ளைப் பாட்டாம்,
மூன்னுறக் கிளந்த ஆண்டின் நாள்வரை,
இசைத்த பாடல் இருபாற்கும் உரியதே.''

முன்னூல்களில் இவ்வாறு பருவங்களும், கால அளவு பல வேறுவகையாகக் காணப்படுவன ஆயினும் மேற்கூறிய பத்துப் பருவமே இக்காலத்தால் ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்டவை.

இப் பிரபந்தம் தாம் வழிபடும் தெய்வங்கள், பெரியோர்கள் என்னும் இருகூட்டத்துள் எவரையேனும் பாடும் இயல்பின தாகும்.

அன்புள்ள,

புலவரகம், நெல்லை
20—4—1957

பு. சி. புன்னைவனநாதன்.

உ

சிவமயம்

திருவிலஞ்சி முருகன்

பிள்ளைத்தமிழ்

காப்பு

முகில்ஒன்று பாற்கடல் மடுப்பது கடுப்பநெடு
மோட்டுப் பணைக்கை நீட்டி
மூவுலகும் ஈன்றஉமை கும்பப் படாமுலை
முகட்டுப் பகட்டில் முட்டித்

துகில்ஒன்றும் உத்தரியம் நனைவுறப் பெருகுபாற்
றுள்அருவி வெள்ள மாந்தித்
தோய்ந்துநீந் திக்களித் தாடும்ஒரு கன்றினை
துணை அடிக் கன்பு செய் வாம்;

பகல்ஒன்று செஞ்சுடர் புறத்திருள்சு ருட்டும்அப்
பான்மைபோல் இருபொழுதும் என்
பல்வகை அகத்திருள்சு ருட்டும்ஒரு ஞானப்ர
பாகரனை மகளிர் கூந்தல்

அகில்ஒன் றிலஞ்சிகமழ் தென்இலஞ் சிக்குமர
குருபரனை அமரர் வாழ்வை
அள்இலைய வேற்கைப்பி ரானைப் பராவுறும்என்
அதிமதுர கவிதழைகவே.

(அரும்பதவுரை) முகில் - மேகம். மடுப்பது கடுப்ப - பருகுவதைப்போல. பணைக்கை - பணைபோன்ற கை: உவமைத்தொகை.

மோடு - உயர்ந்து. படாம் - துகில். பகடு - யானை. கன்றானை - யானைக்கன்று; பிள்ளையார். துணை - இரண்டு. பான்மை - தன்மை இயல்பு. அகத்திருள் - மன அறியாமை. ப்ரபாகரன் - சூரியன். அள் இலை - கூரிய இலைவடிவமான. அதிமதுர கவிதை - மிக இனிய பாடல். தழைக - செழித்தோங்குக. வியங்கோள் வினை முற்று.

க. காப்புப்பருவம்

திருமால் துதி

தேமேவு தமிழும் கடம்பும் தடம்புயத்
திரள்மணிக் குவடு பூத்துச்
செக்கர்வான் என்னவரும் ஓர்ஆறு திருமுகத்
திங்கள் அம் சிறுகுழவியைக்

கோமேவு செந்தமிழ் இலஞ்சிவே லவனைத்ரி
கூடா சலத்தெம் பிரான்
கொத்தடியர் குலம்எலாம் தழையவரும் அரசிளங்
குமரனை வியந்து காக்கப்

பூமேவும் உந்தியில் பல்புவன பந்தியைப்
பூத்துமுறை காத்து நின்ற
பொருவரிய நீலப்பொ ருப்பைக் கருப்பைப்
புகாதுபுக் கிந்தி ரற்குக்

காமேவும் அரசிருப் புதவுசக் ராயுதக்
கடவுளைக் குடவளைக் கைக்
கண்ணனைத் தண் அம் துழாய்மௌலி யானைமங்
கலவாழ்த் திசைத்தும்அன் றே.

(அ - ரை.) தேமேவு - இனிமை பொருந்திய (தேன் மேவு). தமிழும் கடம்பும் பூத்தலாவது - தமிழ்ப் பாமாலையும் கடப்பம்பூ மாலையும் தோன்றுதல். செக்கர் - சிவப்பு. திங்கள் - மதி. திரிகூடாசலம் - மூக்குடுமி மலை; திருக்குற்றாலத்தை அடுத்து விளங்கும் பொதிகைமலைப் பகுதி. கொத்து - தொகுதி, திரள். உந்தி -

நாபி. புவனபந்தி-உலக அடுக்கு. பொருப்பு - மலை. குடவளைக்கை- திரண்ட சங்கைத் தாங்கிய கை; சங்கு, பாஞ்ச சன்னியம். (க)

சிவபெருமான் துதி

அரவின்முக மண்டலமும் அமுதமயம் ஒன்றநில
வார்சடைக் கொத்தேறு நீள்பிறைக் கீற்றனை
அமுதபலி தந்தபல முனிவரர் மடந்தையரும்
ஆசைமுற் றிச்சோரும் மாதவக் கூத்தனை
அவ்சொரி கங்கைமது ஒழுகிநுரை பொங்கிபுனல்
வார்திரைச் சிற்ருறு சூழ்துறைத் தீர்த்தனை
அகிலபகிர் அண்டமும்ஓர் அடியினில் அளந்தமுகில்
காணுதற் கெட்டாத சோதியைச் சீர்ப்பொலி

பரவைமனை சென்றுகவி பரவசம் இயம்பிவரு
தூதினைச் சொற்றருளும் நீதனைப் பூத்தொளிர்
பணிவரை மடந்தைபெறு குழல்மொழி மடந்தை ஒரு
பாகனைச் சொற்காதி போகனைப் பாக்கியப்
பலமிகு குறும்பலவின் நிழல்மிகு விளங்குசிவ
லோகனைக் கர்த்தாவை ஏகனைக் கூர்த்தெழு
பழமறை கிடந்தலற வழிஅடியர் தெண்டன்இடு
பாதனைக் குற்ருல நாதனைப் போற்றுதும் ;

விரிதிரை முகந்துநவ மணிவிசிறு செந்திநகர்
மேவுகப் பற்சேரும் ஆழ்கடற் சேர்ப்பனை
மிர்கமத கதம்பதள பரிமள சுகந்தபுய
பாரனைக் கற்பூர பாளிதக் காப்பனை
விகடதட கும்பகட கரடமத குஞ்சர
விநாயகர் கற்பமர்வி சாகனைச் சேட்பொலி
வெறிகமழ் குறிஞ்சிமனை வரையுறு மடந்தையால்
விகாரமுற் றுச்சாப வேடரில் தோற்றிய

குரிசிலை மணம்புணர்தல் குறமகள் விரும்பும்அநு
கூலனைக் கட்டாரி வேலனைக் கோற்ருெடி
குலவுகர சுந்தரிபொன் மனையில்வளர் குஞ்சரி
மணுளனைச் சப்பாணி கூடுகைக் காப்பொலி

குமுறஒரு புண்டரிகன் மணிமகுட பந்திபுடை
கோபனைக் கற்றோர் குழாம்எழுந் தேற்றிய
கொழிதமிழ் இலஞ்சிநகர் தழையவள ருஞ்சிறு
குமாரனைக் கட்டாண்மை வீரனைக் காக்கவே.

(அ - ரை.) அரவின் - பாம்பின். நிலவு ஆர் - ஒளிபொருந்திய. பிறைக்கீற்றனை - இளமதி அணிந்தவனை. அமுதபலி - சோற்றுப் பிச்சை. ஆசை முற்றி - காதல் நிரம்பி. வார்திரை - நீண்ட அலை. சிற்றாறு - சித்திரா நதி. முகில் - மேகவண்ணனாகிய திருமால். பரவை - திருவாரூரில் சுந்தரமூர்த்தி நாயனாரை மணந்த பொதுமகளிராகிய பரவை நாச்சியார். நீதன் - நியாயம் உடையவன். பனிவரை மடந்தைபெறு - பனிமலையாகிய இமய மலைக்குரிய இமவான் பெற்ற தவமடந்தை உமாதேவியார். குறும் பலவின் நிழல் - தலமரமாகிய குறும்பலா மரத்தின் நிழலில். பழமறை - பழமையாகிய வேதம்; மறை - பொருள்களை மறைவாகக் கொண்டு இருப்பது; மறை மறுக்கப்பட்டது என்றலும் ஒன்று. போற்றுதும் - வணங்குவோம்.

விசிறு - வீசுகின்ற. சேர்ப்பன் - கடற்கரைத் தலைவன். மிர்கமத கதம்பதள பரிமள சுகந்த புயபாரனை - கத்தூரி வெண் கடம்பு நல்மணமிகு மாலை பொருந்திய தோளை உடையவன். பாளிதம் - சந்தனப் பாற்சோறு. சினி பாளித கற்பூரம் மீமிசை மொழியுமாம். விகடதட கும்பகட கரடமதகுஞ்சர விநாயகர் கற்பமர் - விகடக் கூத்துடைய பெரிய கும்பம்போன்ற மத்தகத்தின் நின்றும் பெருகுகின்ற மதநீர்ச்சுவட்டை உடைய யானை முகத்தை உடைய விநாயக மூர்த்தியின் இடத்தில் அன்பு கொண்டுள்ள, விசாகநாளில் தோன்றியவனாகிய முருகனை. கற்பமர் - அன்புஅமர் : மென்தொடர் வன்தொடர் ஆயிற்று. சேட்பொலி - வெகுதூரம் விளங்குகின்ற. வெறி - மணம்; இனி, வெறியாடலும் ஆம். மடந்தை - வள்ளி நாயகி. விகாரம் - வேறு பாடு. சாபம் - வில் கட்டாரி-குத்துவாள். கோற்றொடி - அழகிய வளையல்; தொடுக்கப் படுவது தொடி. தொடுத்தல் - பெய்தல். குஞ்சரி - தெய்வயானை. கைக்காப்பொலி - கையில் அணிந்த காப்பின் சத்தம். புண்டரீகன் - தாமரையான், பிரமன். மணிமகுட பந்திபுடைகோபனை - பிரணவப்பொருள் அறியாத பிரமன் நான்கு தலையிலும் அணிந்த மணி

மகுட வரிசைகள் சிதறும்படி குட்டிக் கோபம்கொண்ட குமரனை.
குழாம் - கூட்டம். (உ)

பராசத்தி துதி

வலம்புரிகொள் வீதியினும் வளர்கோ புரத்தினும்
வயங்குசெறி நீள்அருவி மணிகாலும் வைப்பினும்
வழங்கும்ஒரு மூவரையும் மகவாய் வளர்த்திய
வளந்தரணி பீடநிலை சொலவே தொழப்புகல்

குலம்கெழு சுராதிபர்ம குடகோடி துற்றிய
கொழுங்கதிர் நிலாமணிகள் வெயிலாய் எரிக்கஒர்
குறும்பலவின் நீழல்உறை குழல்வாய் மொழிக்கொரு
குழந்தைஅடி யேமுழுதும் வழிபா டியற்றுவாம்

கலங்குகடல் நீர்சொரிய அயிரா வதத்தெழு
கடுங்குலிச தாரணனு மடவாள் குயத்திடை
கலந்தினிது வாழஒரு மயில்வா கனத்தெழு
கடம்பமலர் சேர்புயபன் னிருபார வெற்பனை

இலஞ்சிநகர் வாழ்பவனை எனை ஆளும் அப்பனை
இலங்கிழை நலார்எழுத முடியாத பொற்பனை
இலங்குசுடர் வேலவனை இமையோர்கள் வைப்பைஎன்
இளங்குமர நாயகனை இயல்பாய் வளர்க்கவே.

(**அ - ரை**) வலம்புரி கொள்வீதி - வலம்புரி வடிவமான சங்குவீதி. மணிகாலும் வைப்பு - முத்தைச் சொரியும் இடம். துற்றிய - நெருங்கிய. எரிக்க - எரியைச் செய்ய. குலிசதாரணன் - வச்சிரப்படை தாங்கும் இந்திரன். புயபன்னிரு பார வெற்பனை - கனத்த தோள்களாகிய பன்னிரண்டு மலைகளுடையவனை. பொற்பனை - அழகனை. வைப்பை - பொருளை, நிதியை. (ந)

செண்பக விநாயகர் துதி

ஆனனம் விளங்கிய பனைத்தடக்கைச் சேர்த்தெழு
பாரதப் பெருங்கதை வடித்தெடுத்துக் காட்டிஓர்
ஆயிர நெடுஞ்சிகர புத்தகத் தில்தீட்டி
அராமுடி அகன்புவி புரக்கும்ஒற்றைக் கோட்டனை

வானவர் பெருந்தகையை வச்சிரக்கைப் பார்த்திபன்
மாமுடி புனைந்தசர ணத்தனைப் பற்றார்க்கொரு
வாலுளை மடங்கலென நிற்கும்வெற்றித் தாக்கனை
மாரிசொரி செண்பகவ னக்களிற்றைப் போற்றுதும்;

பானல்கம ழுஞ்சரவ ணத்துதித்துக் கார்த்திகை
பால்ஒழுகு கும்பமுலை யைக்குடித் துப்பார்த்தெழு
பார்வையில் இரங்கிஒரு பட்டுடுத் துப்போர்த்த
படாமுலை முகங்களில் எடுத்தணைத் துப்பார்ப்பதி

வானுலவு செங்கண்விடை மத்தர்வைத் துத்தேற்றிடு
வானிதர வந்தசிறு பொற்றளிர்க்கைக் காப்பனை.
வாழ்வுறும் இலஞ்சிநகர் வைப்பை எய்ப்பிற்காக்கும்
மனோகர துரந்தர மணிப்பொருப்பைக் காக்கவே

(அ - ரை.) ஆனனம் - முகம். பனைத்தடக்கை-பனைபோன்ற பெரிய தும்பிக்கை. நெடுஞ்சிகரப் புத்தகம் - நீண்ட குடுமிகளாகிய புத்தகம். "வாடாத தவவாய்மை முனிராசன் (வியாசன்) மாபாரதஞ் சொன்ன நாள் ஏடாக வடமேரு வெற்பாக எழுத்தாணிதன் கோடாகக் கொண்டெழுதும் பிரான்" என விநாயகர் வில்லிபுத்தூரரால் போற்றப்படுதல் காண்க. அராமுடி - பாம்புமுடி. அகன்புவி - பரந்த உலகம். கோட்டன் - கொம்பன். பார்த்திபன் - அரசன். வால்உளைமடங்கல் - வாலையுடைய பிடரிமயிர் வாய்ந்த சிங்கம். தாக்கன்-உரமுடையவன். பானல் - கருங்குவளை. போர்த்த-மூடிய. மத்தர்-ஊமத்தம் பூவணிந்த அல்லது உன்மத்தர் (பித்தர்) ஆன சிவபெருமான். பொற்றளிர்க்கை - பொன் போல் அழகிய தளிர் போன்ற கை. எய்ப்பிற்காக்கும் - இளைத்துத் துன்புற்ற சமயத்தில் வருந்தாமல் காக்கிற. (ச)

திருமகள் துதி

வெங்கடாங் கரடக் கடாங்கவிழ்த் தூற்றுமத
வேழங் கடாந் தடக்கை
வெம்பணி பிணித்தசெம் பருதிபொரு வுஞ்செம்பொன்
விம்பகும் பங்க ளாட்டப்

பொங்குபூண் நகுகும்பம் ஏந்துபைங் கூந்தல்அம்
பிடிகள்போற் கவரி காலப்
புடைநின்ற முடிபொறுத் தரிவனப் பூந்தவிசு
போந்தபெண் அரசு காக்க;

கொங்குலாம் செழுமலர் இலஞ்சியிற் சினைவரால்
கொழுமலர் இலஞ்சி யிற்போய்க்
கொண்டல்நுண் துளிகொண் டிரங்குதென் இலஞ்சியிற்
குமரனைச் சமர்க டந்த

சிங்கமா முகனைமுதல் இட்டபகை வேர்அறச்
செவ்வேல் வலந்த ரித்துத்
தேவேந் திரற்கர சளித்ததிறல் ஆளியைத்
தேவர்சே னாபதி யையே.

(அ - ரை.) வெங்கடாம் - கொடிய மதநீர். வேழம் - யானை. செம்பருதி - சிவந்த சூரியன். விம்பம் - உருவம். நகு-விளங்கின்ற. பிடிகள் - பெண் யானைகள். அரிவனம் - வண்டுக்கூட்டம். தவிசு - இருக்கை. சமர்கடந்த - போர்வென்ற. கொங்கு - மணம் - தேன். இலஞ்சி - ஏரி, குளம், மதில். முதலிட்ட - முதலாகக்கொண்ட. பகைவேர் அற - பகைவராகிய மரத்தின் வேர்கள் அறும்படி. வலம்தரித்து - வலது கையில் தாங்கி, அல்லது வெற்றிக்கு அறிகுறியாகத் தாங்கி. திறல்ஆளி - வீரமுடையவர். ஆழி எனின் கடல் என்க. சேனாபதி - படைத்தலைவன். (ரு)

பிரமதேவன் துதி

திணிகொண்ட மூதண்ட மண்டபம் பணிகொண்டு
சீவகோ டிகள்உ யிர்த்துச்
செந்தா மரைப்பொலங் தவிசில்வெண் தாமரைத்
தேவியுடன் மேவி ஏவற்

பணிகொண்ட மகவாடல் கண்டனைய விளையாடல்
பார்த்தகம் மகிழ்ந்துபூத் துப்
பல்ஊழி வாழும்ஒரு தொல்பெருஞ் செல்வம்
படைத்தவன் காக்கமன் னே;

மணிகொண்ட கட்செவி நிதம்பக் கதம்பமுலை
வள்ளிபடர் கொழுகொம்ப ராய்
வளர்கின்ற பன்னிரு தடம்புயனை என் இருகண்
மணியைமா ணிக்கமலை யைத்

தணிகொண்ட கொண்டல்நுண் துளியும்வெண்
தாரகையும் நிரைகிடப் பத் [தாளநிரையும்வண்
தண்டலை தழைத்தசுப் பிரமணிய புரவசதி
தருகுமர குருபரனை யே.

(அ - ரை.) திணி - உறுதி. மூதண்டம் - பழையலோகம். வெண்டாமரைத்தேவி - நாமகள். மணிகொண்ட கட்செவி நிதம்பம் - இரத்தினம் பொருந்திய பாம்பின் படம்போன்ற அல்குல். கதம்பம் - மணக்கூட்டு கொண்டல் - மேகம். வெண்தரள நிரை - வெள்ளிய முத்துவரிசை. வண்தாரகை - வளப்பமிக்க நட்சத்திம். தண்டலை - சோலை. (சு)

நாமகள் துதி

முத்தமிழ் ஒருத்தனுக் கருமறைக் கெட்டாத
மூர்த்திகுற் றேவல் கேட்க
முற்றிவிக் குந்திர முடத்தேன் முகந்துமணி
முடிவேந்தர் முன்றில் எதிர்போந்

தித்திறத் தரியா சனந்தர் அயி ராசபதம்
எய்திஇக மும்பர மும் வாய்ந்
தெம்மனோர் செம்மாந் திருக்கப் பெருங்கல்வி
இறைமைதரும் இறைவி துணை ஆம் ;

சித்தசனன் மைத்துனனை அத்திமுக னுக்கிளைய
சிங்கத்தை வென்சூர் அறச்
செஞ்சேவ லங்கொடி உயர்த்தபைங் கரம்ஒன்று
தேவர்கோ மகன் முடிக்கு

வைத்துமுழு தாண்டதென் இலஞ்சிநகர் ஆதிபனை
வரைபக எறிந்தவேற் கை
மறவனைத் தழையுமர கதகலா பமயூர
வாகனனை வாழ்விக்க வே.

(அ - ரை.) முன்றில் - முற்றம். அரியாசனம் - சிங்காதனம். செம்மாந்திருக்க - களித்திருக்க. இறைமை - தலைமை. சித்தசன் - மன்மதன். அத்திமுகன் - யானைமுகக் கடவுள். வெம்சூர்அற - கொடிய சூரபத்மன் (ஆணவவீரம்) கெட. வரை - கிரௌஞ்சமலை. பக - பிளவுபட. மறவன் - வீரன். மரகதகலா மயூரவாகனன் - பச்சைநிறம் பொருந்திய தோகையுடைய மயிலை வாகனமாக உடையவன். (எ)

சத்தமாதர்கள் துதி

பொன்னில் சிறந்திட்ட புலமையில் தலைமையில்
பொய்யாத மெய்உணர்வி னில்
பொற்புண்ட ரீகபத பூசனையில் வாசனை
பொருந்தப் பயிற்றிமுழு தும்

என்னைப் புரந்துகொண் டன்றே தனக்கடிமை
என் றுவிலை ஓலையிட் ட
எம்பிரான் செந்தமிழ் இலஞ்சிப் பிரான்பொருட்
டெழுவரையும் அஞ்சலிப் பாம்;

அன்னத்தில் வருமயிலும் மயிலில்வரு கிள்ளையும்வெள்
ஆனையில் தோன்றுபிடி யும்
ஆனின்வரு மானும்முது கலையில்வரு மானும்புள்
அரசில்வரு கரியகுயி லும்

முன்னுற்ற சிங்கப் பொருப்பில்வரு கால்மாவும்
முதிர்பரவை காற்றின்அணு கல்
முடுகாமல் மாற்றிநின் றேற்றகுழ விப்பருவம்
முழுதும் புரக்கஎன் றே.

(அ - ரை.) புலமை-அறிவுடைமை. மெய் உணர்வு-உண்மை அறிவு. பொற்புண்டரீகபதம் - பொற்றாமரை அடி. விலைஓலை - அடிமைச்சீட்டு. எழுவர் - எழுமாதர்கள். அஞ்சலிப்பாம் - கை கூப்பி வணங்குவோம். (1) அன்னத்தில் வருமயில் - நாமகள்; அபிராமி. (2) மயில்வருகிள்ளை - கௌமாரி. (3) வெள்ஆனையில் தோன்றுபிடி - இந்திராணி. (4) ஆனின்வருமான் - மகேஸ்வரி. (5) முதுகலையில் வருமான் - வராகி. (6) புள்ளரசில் வருகரிய

குயில் - வைணவி; நாராயணி. (7) சிங்கப்பொருப்பில் வருகால்மா-காளி, சாமுண்டி. பரவை-கடல். மூடுகாமல் - வீரையாமல். புரக்க-காக்க. (அ)

காளி துதி

பாமிழற்றும் பாணர்எனப் பண்மிழற்றும் சுரும்பு
பந்தியிருந் தந்திநறை பருகுதரைப் பாண்டிக்
கோமகற்குச் சென்னிபயந் தளித்தகுல மகள்தன்
குலமகட்கு மகன்எங்கள் குருபரனைக் காக்கத்

தேமலர்ச்செண் பகக்காவும் திரிகூடச் சிலம்புஞ்
சினகரமும் நன்னகரும் தென்றல்உலாம் திசையும்
மாமணிச்சங் காவணமும் மன்றும்என்றும் காக்கும்
மங்கையைநம் குற்றால நங்கையைவாழ்த் துதுமே.

(அ - ரை.) பாமிழற்றும் - பாட்டுக்கள் கூறும். பண்மிழற்றும் - இசைபாடும். சுரும்பு - வண்டு. நறை-தேன். சென்னியபயந் தளித்த - சோழன் பெற்றுக்கொடுத்த. தேமலர் செண்பகக்காவும்-தேன்பொருந்திய மலர்களையுடைய செண்பகமரம் அடர்ந்தசோலை. சிலம்பு - மலை. சினகரம் - கோயில். சங்காவணம் - சங்கவீதி. மன்று - சித்திரசபை. (கூ)

முப்பத்துமுக்கோடி தேவர்கள் துதி

கொச்சைப் புனத்தில் குஞ்சிக் கொடிச்சியர்
குழாத்தா டொருத்தி வளரக்
கொற்றமகள் அன்றிட்ட வாகையும் தும்பையும்
பின்னிக் கிடந்து குலவக்

கச்சைப் பொருந்தனத் திந்திர குமாரத்தி
காதல்மண மாலை சூட்டுங்
கற்பகப் பந்தரில் காப்பேந்தி நின்றவன்
காக்கமழ் இலஞ்சிகாப் பார் ;

பச்சைப் பசும்புரவி மான்தேர் மிசைத்தோன்று
பண்ணவர்கள் பன்னிருவரும்
பரிமுகக் கடவுளோர் இருவரும் பொருவரும்
பசுபதிகள் பதினொரு வரும்

இச்சைப் படுந்திறத் தெண்மரும் எனத்தொகுத்
தெண்ணுமுப் பான்மூவ ரும்
இக்கோடி முப்பத்து முக்கோடி என்றதொகை
அமையவரும் இமைய வருமே.

(அ - ரை.) கொச்சை - கீழ்மை. புனம் - காடு. கொடிச்சியர்-குறத்தியர். கொற்றமகள்-காளி. கச்சு-ரவிக்கை; மார்க்கட்டு. பொருந்தனம் - மோதும் கொங்கை. இந்திரகுமாரத்தி - இந்திரன் வளர்ப்பு மகளாகிய தெய்வயானை. காக்கமழ்-சோலை மணக்கின்ற. பச்சைப் பசும்புரவிமான்தேர் - மிக்க பசுமை நிறம் உற்ற குதிரைகள் ஏழும்பூட்டிய ஓர் ஆழித்தேரில், பண்ணவர்கள் பன்னிருவர் - பன்னிரண்டு சூரியர்கள். பரிமுகக் கடவுளோர் இருவர்-அசுவினி தேவர் இருவர். பசுபதிகள் - உருத்திரர்கள். இச்சைப்படுந் திறத் தெண்மரும் - திசை (ஆசை) காவலராகிய இந்திரன் முதலிய எண்மர். இமையவர் - தேவர். (க0)

உ. செங்கீரைப் பருவம்

மேனைப் பிராட்டி தரு பெண் அரசி உள் உவகை
வெள்ளத்தில் ஆட்டுவது போல்
வெள்ளிவரை முன்றில்வாய் பொன் நூபுரந்தள்ளி
மிளிர்கணைக் காற்கிடத்தி

ஏனைப் பசுங்குங் குமந்திமிர்ந் தீர்ம்புனல்
எடுத்தெடுத் தாட்டிவிரல் சேர்த்
தின்னினிய மஞ்சள்நீர் மும்முறை சுழற்றிவார்த்
திருநிலக் காப்ப ணிந்து

சோனைக் குறுந்திவலை பட்டாடை இட்டுத்
துவர்த்திவெண் நீறுசார்த் திச்
சுடர்மா ளிகைப்புகுந் தேந்துமுலை அமிர்தம்
சுரந்திருந் தூட்டிமட வார்

சேனைக்குள் வைத்துமுத் தாட்டும் பசுங்கிள்ளை
செங்கீரை ஆடி அருளே
தெரிதமிழ் இலஞ்சிநகர் வருகுமர நாயகன்
செங்கீரை ஆடி அருளே.

(அ - ரை.) செங்கீரைப்பருவம் பிள்ளைக்கவியின் பத்துறுப்புக்களில் இரண்டாவது. அது பிள்ளை இரு கையும் முழந்தாள்களும் ஊன்றித் தலைநிமிர்ந்திட்டாடல். மேனைப்பிராட்டி - பார்ப்பதியை மகளாகப்பெற்ற இமவான் மனைவி. உள் உவகை வெள்ளம் மனதில் பெருகுகின்ற மகிழ்ச்சிப் பெருக்கு. ஆட்டுவது - முழுக்காட்டுதல்; நீராட்டுதல். வெள்ளிவரை - வெண்ணிறம் பொருந்திய கைலைமலை. முன்றில் வாய் - முற்றத்தில்; வாய்: எழனுருபு. முன்றில் : இல்முன் என்பதன் இலக்கணப்போலி. நூபுரம் - சிலம்பு, காலணி. திமிர்ந்து - பூசி. ஈர்ம்புனல் - குளிர்ச்சியான நீர். இன் இனிய - மிக இனிய. சுழற்றி - சுற்றி : சுழல் என்றதன் வினைப்பகுதி யடியாகப் பிறந்த பிறவினை வினையெச்சம். நிலக்காப்பு அணிந்து - தரையில் நீரிட்டு வழித்த குழம்பைப் பொட்டாக அணிந்து. சோனைக்குறுந்திவலை - சொரியப்பட்ட

சிறுதுளி. துவர்த்தி - உலர்த்தி. முலை அமிர்தம் - முலைப்பால். மடவார்சேனை - பெண்கள் கூட்டம். (கக)

தார்ஆடு கிண்கிணிச் செந்தாள் துதைந்தாடு
தமனியத் தொட்டில் ஆடத்
தண்பவள மெல்விரல் அதுக்கிச் சுவைத்தன்னை
தாலாட்டும் இன்னிசை மடுத்

தேர்ஆடு மெய்துவண் டிணைவிழி முகிழ்ந்தயர்ந்
தின் துயில் வரத்துயின் றுங்கு
இடைவரு பதத்துணை எழூப்பப் புலந்துவயி
றெக்கிக் குழைத்துவிம் மிப்

போர்ஆடு கன்றெனத் துள்ளிஎழு பொருமல்
பொருதுவந் தேந்திமோந் து
பொற்குழிசி ஊறுபால் வெண்சங்கு வைத்துப்
புகட்டத் தெவுட்டிமெள் ளச்

சீர்ஆடி எதிர்நிலைக் கண்ணுடி நிழலுடன்
செங்கீரை ஆடி அருளே
தெரிதமிழ் இலஞ்சிநகர் வருகுமர நாயகன்
செங்கீரை ஆடிஅரு ளே.

(அ - ரை.) தார்ஆடு கிண்கிணி - பூவரும்பு பொருந்திய கிண்கிணி என்னும் சதங்கை. துதைந்தாடுதல் - உதைத்து நெருங்கியாடுதல். தமனியம் - பொன். தண் பவளமெல்விரல் - குளிர்ந்த பவளம்போன்ற மெல்லிய விரலை. அதுக்கி - வாயில் வைத்துக் கடித்து. இசைமடுத்து - பாடல் கேட்டு. ஏர் - அழகு. இணை விழி முகிழ்த்து - இரண்டு கண்களையும் மூடி. வயிறெக்கி - வயிறு குழியச்செய்து. பொருமல் - விம்முதல். பொற்குழிசி - பொற்கலம். தெவுட்டி - உமிழ்ந்து, வாந்தி எடுத்து. (கஉ)

பொருமல்அறி விக்குங் கடைக்கண் குறுந்துயிலி
பொடிக்குமுன் அடுக்க வருவோம்
பொன்மேனி பாயலிற் பூந்தாதும் ஏந்தாது
புதுநீர் எடுத்தாட் டுவோம்

பருமுலை அருத்தித் திருத்திவைத் தின்மொழி
பகர்ந்தணைத் துச்சி மோந்து
பசுமஞ்சள் இனியநீர் மும்முறை சுழற்றிஅப்
பால்ஊற்றி வாழி என்போம்

அருமணி நுதற்சுட்டி கட்டிஒரு பொட்டும்இட்
டண்ணல்வெண் நீறும்அணி வோம்
ஆட்டாத சரவணப் பூந்தொட்டி லிற்கிடந்
தாடின படிக்கு வனசத்

திருமுகம் மலர்ந்துகுழை ஆடவிளை ஆடிநீ
செங்கீரை ஆடி அருளே
தெரிதமிழ் இலஞ்சிநகர் வருகுமர நாயகன்
செங்கீரை ஆடிஅருளே.

(அ - ரை.) பொருமல் - பொருமுதல், வீங்கல். பொடித்தல்-துளித்தல். அடுக்க - நெருங்க. பாயல் - பாய்தல். அருத்தி - உண்பித்து. பசுமஞ்சள் இனிய நீர்; இதனை ஆலத்தி நீர் என்றும் அயினிநீர் என்றும் கூறுப. சுழற்றி - சுற்றி. அண்ணல் - திருவாளன். குழை - காதணி. இச் செய்யுளில் குழந்தையை நீராட்டித் துடைத்து அணிசெய்தலீறாக உள்ள செயல்கள் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. (கரு)

பட்டபுனல் நித்திலம் எனத்திகழும் வட்டவரி
பாசிலைய நெட்டை நெடிய
பச்சைப் பசுந்தாட் கழுத்தளவு நீருட்
பயின்றீன்ற மெல்அரும்பு

வட்டம்இடு பானலைப் புறநிறுத் திசைமுரலும்
மழலைச் சுரும்பர்வீழ்ந் து
வாய்மடுத் துண்ணக் கபாடம் திறக்கும்ஒரு
வள்ளமாக் கொள்ளை நறவம்

கொட்டுபு செழுங்குங் குமத்தா திரைக்குங்
குறுந்தகட் டல்லி புல்லிக்
கோட்டோ டலர்ந்துகமழ் செக்கச் சிவந்தபொற்
கோகனக மண்ட பத்தில்

சிட்டர்தொழ வாழும்ஒரு செல்வி திரு மருமகன்
செங்கீரை ஆடி அருளே
தெரிதமிழ் இலஞ்சிநகர் வருகுமர நாயகன்
செங்கீரை ஆடி அருளே.

(அ - ரை.) நித்திலம் என - முத்துப்போல. பாசிலைய - பச்சை இலையையுடைய. பானல் - குவளை. முரலும் - ஒலிக்கும். சுரும்பர் - வண்டு : சுரும்பு என்பதன் போலி. கபாடம் - கதவு. கொள்ளை - மிகுதி. நறவம் கொட்டுபு - தேனைக்கொட்டி. தகட்டு அல்லிபுல்லி - தகட்டு வடிவினதான அல்லி மலரைத் தழுவி. கோட்டோடு - கொம்பில். கோகனகம் - தாமரை. (கச)

கங்கா நதிக்குநிகர் கடவுள்நதி களின்அதிக
கவின்மணல் தங்கு கழியில்
கதிர்மணிக் குன்றுபொதி புன்னையங் காவில்மென்
காவியங் கயல்பொருதலைக்

குங்கால் இலக்கால் கொழிக்குமடை களில்மடைக்
கோவுகண் ணுற்றுவயலில்
குளிர்வயல் மருங்குவெண் முல்லைமல் லிகைவைத்த
கொல்லையில் கொல்யானை வாற

பைங்காற் பசும்பொற் பொகுட்டுத் தகட்டிதழ்ப்
பங்கேரு கப்பொய்கை யில்
பங்கேரு கச்செல்வி விளையாடு பதிகளில்
பதிநிலா நுதலா ருடன்

செங்கால் அனங்கள்பயில் தென்ஆர்ய நன்னுட
செங்கீரை ஆடிஅரு ளே
தெரிதமிழ் இலஞ்சிநகர் வருகுமர நாயகன்
செங்கீரை ஆடிஅரு ளே.

(அ - ரை.) கவின் - அழகு. கழி - சங்கமத்துறை - மருங்கு. கடல் நீர்கழிந்து நிற்கும் இடம்; உப்பளம். காவி - நீலோற்பலம். கண்ணுறு - வயிலில் நீர் பாயும் பகுதி. பங்கேருகம் - பங்கயம், தாமரை, சேற்றில் முளைப்பது. பதிநிலா நுதலார் - பரத்தையர், நடனமாதர். (கரு)

இந்திரன் அங்கி யமன்கொடி யன்புனல்
ஈசன் நெடுங்கா லோன்
எண்தரு சந்திரன் இந்து வனைந்தவன்
மால்அயன் என்போர் தாம்

தந்தம் இடங்கள் புரந்திட வந்த
தபோதனர் சந்தோடர்
சங்கதி யும்சடை யும்கிர மங்களும்
வேதமும் நின்றோத

மந்தரம் என்ற தனங்கள் சுமந்த
மாதர் வளம்பாட
மங்கல சங்கம் முழங்க வலம்புரி
வால்வளை நின்றூத

அந்தர துந்துபி பொங்க இளங்குகன்
ஆடுக செங்கீரை
அண்டர் வணங்க இலஞ்சி உகந்தவன்
ஆடுக செங்கீ ரை.

(அ - ரை.) அங்கி - அக்கினி, நெருப்பு. புனல் - வருணன். காலோன் - வாயுபகவான். எண்தரு - மதிக்கப்படும். இந்து-மதி. இந்து வனைந்தவன் - உருத்திரபசுபதி. புரந்திட - காக்க. கிரமங்கள் - ஒழுங்குகள். சங்கதி - தொடர்பு. வால்வளை - வெள்ளிய சங்கு. மந்தரம் - மந்தரமலை. என்ற-போன்ற. அந்தரதுந்துபி - ஆகாய துந்துபி வாத்தியம். அண்டர் - தேவர். உகந்தவன் - விரும்பியவன். (கசு)

வாழி மடற்பாளைக்குழல் சரிதர
வார்கெழு பந்தாடும்
மாதர் இளைப்பா றத்தனி வருசிறு
கால்விசி றுங்காவில்

வீழிஇ தழ்க்கா வித்துணை விழிமணி
வேரல் நெடுஞ்சாரல்
வேடர் குலப்பா வைக்கொரு புதுமண
மாலைபு னைந்தாய்நீ

சூழிமு கத்தா னுக்கிளை யவன்உயர்
தோகையர் மன்ருடு
சூலம்எடுத்தா டிப்பலி கொளுமதி
சூடித ரும்பாலன்

ஆழித ரித்தோ னுக்கொரு மருமகன்
ஆடுக செங்கீரை
ஆறுமு கப்பே ரிக்குரு பரன்இனி
தாடுக செங்கீரை.

(அ - ரை.) பாளைக்குழல் - பாளை பின்னியிருப்பதுபோல் பின்னிவிடப்பட்ட கூந்தல். சரிதர - சரிய. வார்கெழு - நீட்சி பொருந்திய. இளைப்பாற - இளைப்புத் தணிய. சிறுகால் - தென்றல். விசிறும் - வீசும். வீழி - கோவைப்பழம். வேரல் - மூங்கில். மணமாலை - மணத்தையுடைய மாலை, திருமணத்தைக் குறிக்கும் மாலை. சூழி - யானை முகபடாம். ஆடி சூடி என்பன, வினையாலணையும் பெயர்கள். ஆழிதரித்தோன் - சுதரிசனம் என்னும் சக்கரப்படையைத் தாங்கிய திருமால். (கஎ)

மாதளை ஊடே மாவின் நறுங்கனி
வீழ்தர மந்தாரை
வாடியின் ஊடே வாழை நறுங்கனி
வீழ்குலை சென்றேழு

காதமும் மாறு வாசனை தந்திட
மூசு சுரும்பேறு
காவிக ளோடே கார்வய லின்புடை
ஓடைப ரந்தோடி

மேதகு பாரா வாரம் வளந்தர
வேர்கவி சம்பீர
வேலியின் ஊடே பால்மணி சங்கினம்
வீசவ ளங்கூரும்

ஆதிபி ரான்ஊர் ஆளும் நெடுந்தகை
ஆடுக செங்கீரை
ஆரண நூலோர் தேடும் இலஞ்சிமன்
ஆடுக செங்கீரை

(அ - ரை.) மாவின் நறுங்கனி - மாமரத்தின் இனிய பழம். வாடி - கொல்லை, தோட்டம். பாராவாரம் - கடல். சம்பீரம் - எலுமிச்சை. நெடுந்தகை - பெருமைக் குணமுடையவன். (கஅ)

உருவப் பிடிநிகர் பருவக் குறமகள்
பந்தா டுங்காவூ
டுருகிக் கனமயல் பெருகிக் கருகி
உழன்றே நின்றாய்வோய்

அருணைக் கிரிபுனை தெரியற் பெரியபி
ரபந்தா லங்காரா
அசலக் குறுமுனி பணியப் பணிவிடை
கொண்டா ளுந்தாளா

இருவர்க் கரியவர் பவளச் சடையினர்
மைந்தா ஐந்தூரா
எளியற் கருள்புரி கருணைக் கடலெனும்
எந்தாய் செந்தூரா

திருவிற் பொலிதரு பழனிக் குருபர
செங்கோ செங்கீரை
திமிரப் பரமத படலத் தினகர
செங்கோ செங்கீரை.

(அ - ரை.) உருவப்பிடி - வடிவமைந்த பெண்யானை. உழன்று - வருந்தி. ஆய்வோய் - ஆராய்கின்றவனே. அருணைக்கிரி புனை - அருணகிரிநாதன் சூடிய தெரியல் மாலை. பிரபந்தா அலங் காரா - பாடல் நூல்களை அணியாகக் கொண்டவனே. அசலம் - மலையாசலம் ஆகிய பொதிகை மலை. குறுமுனி - குட்டைமுனிவனான அகத்தியன். தாளா - அடியையுடையவனே. இருவர்-மால் அயன் என்ற காத்தற் கடவுளும் படைத்தற் கடவுளும் ஆகிய இரண்டு பேர். திமிரப் பரமத படலத் தினகர- அறியாமையாகிய இருளையுடைய புறமதங்களாகிய மறையை வெளிச்சமாக்கும் சூரியனே!

(கக)

குறுமுனி வந்தார்ச் சனைபுரி
குன்றே சென்றே ஓர்
குன்றிற் சிறுகொடி ஒன்றிப் படர்கொழு
கொம்பே எங்கோ வே

அம்பொற் றளிர்அடி நம்பித் தொழும்அவர்
அன்பே என்பே றே
அங்கட் புவிமுதல் அண்டத் தளவுள
அஞ்சே செஞ்சே யே

வம்புப் பிறவியி டும்பைக் குதவும்
மருந்தே செந்தே னே
மன்றற் குழல்மொழி முன்றிற் பயில்சிறு
கன்றே வென்றே வேல்

செம்பொற் கையில்அணி செந்திற் கதிபதி
செங்கோ செங்கீ ரை
செஞ்சொற் பழகும்இ லஞ்சிக் குருபர
செங்கோ செங்கீ ரை.

(அ - ரை.) குன்றிற் சிறுகொடி - வள்ளிமலையிற்றோன்றிய இளங்கொடியாகிய வள்ளி. படர்கொழு கொம்பே - படர்ந்து தழைக்கத்தக்க செழித்த கொம்பு போல்வானே. பேறே - பெறப் படும் பெருமாளே, பாக்கியமே. வம்பு - புதுமை, வீண். இடும்பை - துன்பம். (உ0)

௩. தாலப்பருவம்

கடவுட் புலம்போய்க் கற்பகத்தின்
காவோ டிகலி உயரியபைங்
கமஞ்சூற் கமுகின் மிடறுவிண்ட
கற்றைத் துணர்ப்பூ விரிக்கவரி

துடைவைப் புதுப்பூந் தொடைஅழகார்
சுரமா மகளிர் பணிமாறும்
துணைப்பூங் கவரி உடன்பயின்று
சுடர்வெண் தரளம் இடைகலந்த

முடவுப் பிறைநான் கெனமுளைத்த
முனைவாள் மருப்புப் பொருப்புகைத்து
முற்றும் பவனிக் குலிசபதி
மொய்ம்பிற் சிறுகால் முகந்தெறியும்

அடவிப் பொதும்பர் செறிஇலஞ்சிக்
கரசே தாலோ தாலேலோ
ஆறு முகத் தெம் பெருமானே
ஐயா தாலோ தாலேலோ.

(அ - ரை.) **தாலப்பருவம்:** இஃது ஏழாந் திங்களில் திகழ்வதாகக் கூறுவது. இது பிள்ளையைத் தொட்டிலில் இட்டு மகளிர் நாவினுற்பாடும் பாடல்களுடன் தொட்டில் ஆட்டும் பருவம். தால்-நா. கடவுட் புலம்-தேவருலகம். இகலி-மாறுபட்டு. கமஞ்சூல்-கருப்பம் நிறைந்த. மிடறுவிண்ட-கழுத்தில் விரிந்த. கற்றைத் துணர்ப்பூ-தொகுதியான பூங்கொத்து. துடைவை-பூந்தோட்டம் பணிமாறும்-இரட்டும். தரளம்-முத்து. முடவு-வளைந்த. குலிசபதி-வச்சிரப்படை தாங்கும் இந்திரன். அடவிப்பொதும்பர்-காடான சோலை.

(உக)

பொலங்கற் பகத்தின் சினைபூத்த
பொன்னங் துணர்ப்பூந் தாதுபடி
புனிதச் சுரும்பர் முகடுரிஞ்சும்
புயல்காற் றரும்பின் மிசைபூத்த

கலங்கற் பசுந்தேன் உவட்டெறிபூங்
கனியின் சிறப்புக் கடைக்கணித்துக்
கனகா டவிஎன் றுவந்தடுக்கக்
கடுக்கைப் புறவம் தோன்றுதலும்

விலங்கற் கரிதாய்ப் புகுந்தயலே
வேரிப் புதுச்சண் பகச்சோலை
விழையா மருதப் பேட்டளியை
வேட்டங் கணையும் இலஞ்சிவெற்றி

அலங்கற் குடுமி இலங்கிலைவேல்
அரசே தாலோ தாலேலோ
ஆறு முகத்தெம் பெருமானே
ஐயா தாலோ தாலேலோ.

(அ - ரை.) சினை - கிளை. தாதுபடி - மகரந்தம் தோய். புனிதம் - தூய்மை. உரிஞ்சும் - தேய்க்கும். கடைக்கணித்து-பார்த்து. கனகாடவி - பொற்காடு. கடுக்கை - கொன்றை. புறவம் - காடு, குறிஞ்சி நிலம். வேரி - மணம். விழையா - விரும்பி: செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் செய்து எனத் திரிந்தது. பேட்டளி - பெண்வண்டு. வேட்டு - விரும்பி. (உஉ)

கள்ளத் தடங்கண் கடைசியர்கைக்
கருங்காப் பிடறிக் களைபறித்த
கற்றைக் கழுநீர்ப் பொதிசரித்துக்
கமுகின் பழுக்காய்க் குலைசிதறி

முள்ளுப் பொதிந்த குடக்கனியை
முடத்தேம் பலவ முகந்துடைத்து
மொய்பூந் தேமாங் கனிஉகுத்து
முழுக்காய்க் கதலிக் குலைசாடி

வெள்ளைப் பெடைஓ திமங்கிடந்த
வேலிப் புறத்திற் பழுத்தஎலு
மிச்சங் கனிபந் தடித்துவெடி
வாளைப் பகடு விளையாடும்

அள்ளற் பழனத் தமிழ்இலஞ்சிக்
கரசே தாலோ தாலேலோ
ஆறு முகத்தெம் பெருமானே
ஐயா தாலோ தாலேலோ.

(அ - ரை.) கடைசியர் - பள்ளியர். கருங்காப்பு - கரும்பொன் காப்பு, பெருங்காப்பு. சரித்து - சாய்ப்பித்து. பழுக்காய் - பாக்கு. குடக்கனி - பலாப்பழம். உகுத்து-சிதறி. சாடி-மோதி, புடைத்து. ஓதிமம் - அன்னம். வாளைப்பகடு - ஆண் வாளைமீன். அள்ளல் - சேறு. பெருமான் - பெருமையையுடையவன். பெண்பால் - பெருமாட்டி. (உ௩)

என்பார்ப் பதித்தாய் ஏக்கறநின்
திருக்கார்த் திகைத்தாய் ஒருங்கேவந்
தேந்து முலைப்பால் அமுதூட்டி
இலைப்பாற் கிடந்த மலைப்பின்றி
முன்பா லிலையில் ஒழுகொழுந்து
முகில்போற் கிடந்து தனிவளர்ந்த
முளரித் தடங்கண் மாதுலன்போல்
முழங்குஞ் செழுநீர்ச் சரவணத்துப்
பொன்போல் துயின்ருய் குயின்றமணிப்
பூந்தொட் டிலில்யான் தாலாட்டிப்
பொன்னங் குறங்கு தடவவும்கண்
பொருந்தாய் போலும் இருந்தாயால்
அன்பாய்த் தென்பார் புகழ்இலஞ்சிக்
கதிபா தாலோ தாலேலோ
ஆறு முகத்தெம் பெருமானே
ஐயா தாலோ தாலேலோ.

(அ - ரை.) ஏக்கற - அங்கலாய்த்தலற. திருக்கார்த்திகைத் தாய் - சிறந்த கார்த்திகைப் பெண். ஆலிலையில் ஒரு கொழுந்து முகில்போல் - திருப்பாற் கடலில் ஆலஇலையில் அறிதுயில் கொள்ளும் திருமாலைப்போல். மாதுலன் - தாயுடன் பிறந்தான். குறங்கு - தொடை. கண் பொருந்தாய் - கண் உறக்கங்கொள்ளாய். தென்பார் - தெற்குலகம். (உ௪)

முடக்குங் கருங்கைச் செடித்தாடி
முடைவாய் இடையர் கடைகாலின்
முன்னூன் றியகோல் மிசைத்துயில
முட்டுஞ் சுவைப்பால் முலைச்சுரபி

மடக்குங் குளகின் நசைக்கயல்போய்
வயற்பூஞ் சாலிக் கதிர்மேய்ந்து
மடற்பூ விரியாப் பசுங்கமுகை
வண்ணக் கரும்பென் றெண்ணிஉண்டு

குடக்கம் பிடறிக் கவைக்குளம்புக்
குறுங்கால் பெயர்த்து நறுங்காஞ்சிக்
குளிர்நீள் ஆற்றின் இளம்புனிற்றுக்
குழக்கன் றூட்டிக் குழல்ஒலிகேட்

டடக்குந் தமரோ டமர்இலஞ்சிக்
கரசே தாலோ தாலேலோ
ஆறு முகத்தெம் பெருமானே
ஐயா தாலோ தாலேலோ.

(அ - ரை.) முடக்கும் - வளைக்கும். செடி - அற்பம். முடைவாய் - புலால் நாற்றமுற்ற வாய். கடைகால் - பால்கறக்கும் மூங்கிற் குழல். மிசைத்துயில் - மேல்தூங்க. குழக்கன்று-இளங்கன்று. நசைக்கு-விருப்பத்தால். வண்ணம் - நிறம், அழகு. கவை - பிளப்பு. தமர் - சுற்றம். (உரு)

வீடற் கரிய பாயலின்மேல்
வெறுப்பாய் முளைக்கும் விழிக்கணையோ
வேற்பூங் கணையாய்க் கொடிப்புருவ
வில்லே கொல்லுங் கொடுஞ்சிலையா

ஊடற் பெரும்பா சறைப்பூசல்
உடற்றுங் கடல்தெள் அமுதனையாய்
உருக்குஞ் சமுக வெளிஅகத்தும்
ஊதுங் கருங்கோ கிலக்காளம்

சூடற் கரிய திறல்விருது
சூட்டுந் தடஞ்சோலையின்புறத்தும்
தொடங்கும் இருள்மா மருள்மாலை
தோன்று முன்னம் தெருத்தொறும்பந்
தாடற் சிலைவேள் பயில் இலஞ்சிக்
கரசே தாலோ தாலேலோ
ஆறு முகத்தெம் பெருமானே
ஐயா தாலோ தாலேலோ.

(அ - ரை.) வீடற்கு அரிய-விடமுடியாத. பாயல் - படுக்கை. கொடுஞ்சிலையா - கொடிய வில்லாக. உடற்றும் - வருத்தும். கோகிலக்காளம் - குயில்முழக்கம். ஆடற்சிலை - கொல்லும் திறம் அமைந்தவில். வேள் - மன்மதன்: விருப்பத்தைச் செய்பவன் ( )

இருவிக் குடுமித் திரிகூடத்
திணர்ப்பூஞ் சாரற் புறத்தும்தென்
இலஞ்சித் திருக்கோயிலின்அகத்தும்
இருந்த படியே திருந்தொளியாய்
மருவிப் பிரியா வள்ளியுடன்
வடிவேல் செங்கை வலன்ஏந்தி
மயிலின் புறத்துக் கயிலாய
மலைபோல் உயர்ந்த மலைஅகத்தும்
குருவிற் சிறந்த கும்பமுனி
கும்பிட் டிறைஞ்ச நின்றநிலை
கூட்டிப் பணியுந் தண்பொருநைக்
குமரா பாவ நாசம்என்னும்
அருவிக் குடுமித் தடாகபுலத்
தமர்ந்தாய் தாலோ தாலேலோ
ஆறு முகத்தெம் பெருமானே
ஐயா தாலோ தாலேலோ.

(அ - ரை.) இருவிக்குடுமி - தினைத்தாள்களையுடைய முடி (சிகரம்) கோயில் அகத்தும் - கோயிலுள்ளும். மருவி - தழுவி. வலன் - வலதுகையில், வெற்றி. குரு - ஆசிரியர். தடாகபுலம் - பொய்கையிடம்.

(உஎ)

இதம்உறும் ஐம்பத் தொருவன் னங்கள்
இலங்கு மணிக்கோவை
எழுதரு முதுமறை நான்கு வடத்தும்
இசைத்த பெரும்ப்ரணவப்

புதுமா ணிக்கத் தொட்டிலின் மானத
பூசைத் தனிஅடியார்
பொய்யா மெய்உணர் வணையா டையின்மிசை
பொன்போல் வளர்கின்றாய்;

மதுமலர் பூத்த பொலங்கொம் பனையார்
வகைவகை தாலாட்டு
மட்டார் மலர்ப்பூந் தொட்டி லினங்கள்
மழைக்கண் நெடுங்காவித்

ததைமலர் அணையினும் ஒருதுயில் புரிவாய்
தாலோ தாலேலோ
சம்பத் துதவும் இலஞ்சிக் குருபர
தாலோ தாலேலோ.

(அ - ரை.) ஐம்பத்தொரு வன்னங்கள் - வடமொழி எழுத்துக்கள் ஐம்பத்தொன்று என்ப. அம், அகா என்ற இரண்டும் சேர்த்தால் ஐம்பத்துமூன்றும். முது - பழைய. மாணிக்கத்தொட்டில் - இரத்தின ஊஞ்சல். மட்டார்மலர் - தேன்பொருந்திய பூ. மட்டு - மணமுமாம். ததை - நெருங்கு. சம்பத்து - வாழ்வு. (உஅ)

சிங்கம் முழங்குந் தடவரை முடியிற்
செழுமணி கெழுமுல்லைச்
செறிதயிர் கடையும் இடைச்சியர் செங்கைச்
செந்தா மரைமலரில்

பொங்க முழங்கு மணித்தேர் வீதி
புனைகொடி மணிமாடப்
பொன்நகர் மருத வரைப்பு நிறைந்த
புறம்பணை யின்பாலில்

வங்கம் முழங்கு கருங்கடல் நெய்தல்
மருங்கின் ஒருங்கேவெண்
மதியமும் அமுதத் திவலையும் மான
மணித்திரள் வீசுவதூர்

சங்கம் முழங்குந் தமிழ்நா டுடையாய்
தாலோ தாலேலோ
சம்பத் துதவும் இலஞ்சிக் குருபர
தாலோ தாலேலோ.

(அ - ரை.) செழுமணிகெழு முல்லை - செழித்த மாணிக்கங்கள் பொருந்திய முல்லைத்திணையிலுள்ள. செறிதயிர் - தோய் தயிர். மருதவரைப்பு - மருதநிலம். புறம்பணை - பணைப்புறம்; வயல்வெளி. வங்கம் - தோணி. நெய்தல்மருங்கின் - நெய்தல் நிலமாகிய கடற்கரைப் பக்கத்தில். மணித்திரள் - இரத்தினக்கூட்டம். ஊர்சங்கம் - நகர்ந்து செல்லும் சங்குகள். (உக)

வங்கக் கடலும் நடுங்கப் பொருதெழு
மாசூர் மாசூர்மா
மங்கப் பொருதனை பைங்கற் பகநிழல்
வானோர் ஏனோரும்

அங்கட் புவனியும் வெங்கட் கொடியவ
ராலே வாடாமே
அன்றிற் பெயரிய குன்றைப் பொருமதி
வீரா போரூரா

எங்கட் குடையவர் திங்கட் சடையினர்
பாலா நூல்ஆய்வோர்
என்றப் பழமறை அன்றைக் குளதமிழ்
ஏழேழ் பாவாணர்

சங்கப் புலமை தருஞ்சொற் புரவல
தாலோ தாலேலோ
சம்பத் துதவும் இலஞ்சிக் குருபர
தாலோ தாலேலோ.

(அ - ரை.) மாசுஊர்மாசூர்மா - குற்றம் பொருந்திய பெரிய சூரபத்மனாகிய மாமரம். வாடாமே - வருந்தாமல். அன்றிற்பெயரிய-

அன்றில் என்னும் பொருள்தரும் கிரவுஞ்சப் பெயரையுடைய. பொரும் அதிவீரா - போர்செய்த சிறந்த வீரனே!. போர்ஊரா - திருப்போரூர் என்னும் ஊரிலுள்ளவனே!. திங்கட்சடையினர் - சந்திரனை அணிந்த சடையையுடையவரான சிவபெருமான். என்று அப்பழமறை அன்றைக்கு உள - என்று அந்தப் பழமையான வேதம் வடமொழியில் ஏற்பட்டது எனப்படுமோ அன்று முதலே உளதாயிருக்கின்ற. எழ்எழ் பாவாணர்-நாற்பத்தொன்பது புலவர்; கடைச்சங்கப் புலவரானவர். சங்கப் புலமைதரும் - சங்கத்திலுள்ள அறிவுடைய சொற்களைக்கொண்ட புரவலனே! (௩0)

இந்திரன் பாவைபெறும் இளையவள்
பாகா ஏகா ஓகாரா
இங்கிதம் பேசு குறமகள்மண
வாளா வேளூர் வேளாளா

உந்தியங் கோகனக முகில்மரு
கோனே கோனே வேலோனே
ஒன்றிரண் டெனஉரை பகரும்என்
நாவாய் ஓவா மீகாமா

மந்தரம் போல்வளர் பனிருபுய
பாரா மாலா கேயூரா
வண்டுகொண் டாடு சுனைமருவு
பிரானூர் வானோர் போரேறே

சந்தனம் தோயுமுலை உமையவள்
பாலா தாலோ தாலேலோ
தண்டையும் காலும் அழகிய
பெருமாள் தாலோ தாலேலோ.

(அ - ரை.) இந்திரன் பாவைபெறும் இளையவள் - தெய்வயானை. இங்கிதம் - நன்மொழி. குறமகள் - குறக்குடியில் வளர்ந்த வள்ளி. வேளூர் - வைத்தீசுரன்கோயில். வேளாள - உதவிபுரிபவ. என் நாவாய்ஓவா-என் நாக்காகிய கப்பலைவிட்டு நீங்காத. மீகாமா!- கப்பலோட்டுபவனே! கேயூரா - மயில்வாகனம் உடையவனே. போர்ஏறே - போர்புரிவதிற் சிங்கம் போன்றவனே! (௩க)

௯. சப்பாணிப் பருவம்

வல்ஏறு பூண்முலைக் குழல்வாய் மொழிக்கவுரி
மழஏ றெனப்பயந் த
வண்டுபடு கவுள்மதக் கரடக் கடாயானை
வட்டம்இட் டுக்கொட்ட நீ

எல்ஏறு சுடர்மணிக் கடகபன் னிருகரம்
இசைந்துசப் பாணிகொட் டில்
இவ்வாறு கொட்டுதும் எனப்பவள வாய்மலர்ந்
தின்அருள் பழுத்துமது ரச்

சொல்ஏறு கடவுட் பழம்பாடல் முறையிடச்
சுடிகைஅர வரசுநெளி யத்
தொந்தம்இடு சூலா யுதக்காளி வெட்குறச்
சுத்ததாண் டவம்நவிற் றிக்

கொல்ஏ றுயர்த்தவன் தமருகம் கொட்டநீ
கொட்டிஅருள் சப்பாணி யே
கொழிதமிழ் இலஞ்சிவரு குமரகுரு பரமுருக
கொட்டிஅருள் சப்பாணி யே.

(அ-ரை) சப்பாணிப்பருவம்: இஃது ஒன்பதாவது திங்களில் நிகழ்வது, இது குழவி கையொடு கை பொருந்துமாறு கொட்டும்படி கூறும் பருவம்; பாணி - கை. வல் - சூதாடு கருவி. மழஏறு - இளஞ்சிங்கம். பயந்த - பெற்ற. கவுள்-கன்னம். எல்எறு- ஒளிபொருந்திய. கொட்டுதும் - கொட்டுவோம். பவளவாய் மலர்ந்து - பவளம்போற் சிவந்த வாயைத் திறந்து. மதுரச்சொல்- இனியமொழி. கடவுட் பழம்பாடல் - நான்மறை. சுடிகை - உச்சிக் கொண்டை. அரவரசு - ஆதிசேடன். நெளிய - நெளிந்துகொடுக்கும்படி. தொந்தம்இடு - குதித்து நடமிடுகின்ற. வெட்குற-நாணும் படி. நவிற்றி - செய்து. கொல்ஏறு - கொல்லும் வலிபடைத்த இடபம். தமருகம் - உடுக்கு. (௩௨)

கடசலதி கொட்டுகைத் தந்தா வளத்துரி
கருங்காள மேகம்எய்ப் பக்
காய்சினப் புலியின்அதள் வெண்தார காபடலம்
ஒப்பக் கவின்கொழித் துப்

படநிலவு கொட்டும்வெண் நீற்றொளியும் மெய்யுமதி
பானுமண் டலநிகர்ப் பப்
பவளச் சடைக்காடு செக்கர்வான் இசையமழை
பைந்தேன் கடுக்கைதூற் ற

விடஅள று கொட்டும்வெங் காகோ தரப்பணிகள்
மின்ஒளி கவற்றிவீ ச
விண்நின் ற விண்ஏறு விண்ணவர் வியந்தேத்த
விண்ஏற்றில் அண்ணல்நந் தி

குடமுழவு கொட்டநடம் இட்டவன் திருமதலை
கொட்டிஅருள் சப்பாணி யே
கொழிதமிழ் இலஞ்சிவரு குமரகுரு பரமுருக
கொட்டிஅருள் சப்பாணி யே.

(அ - ரை.) கடசலதி - மதநீர்க் கடல். கைத்தந்தாவளம் - கையையுடைய யானை. உரி - தோல். காளமேகம் - கருமேகம். எய்ப்ப - ஒக்க. புலியின்அதள் - புலித்தோல். வெண்தாரகாசலம் - வெள்ளிய தாரகைமலை. மதிபாநு - சந்திர சூரியர். செக்கர் வான் - சிவந்தவானம், செவ்வானம். இசைய - நிகர்ப்ப. கடுக்கை - கொன்றைமலர். விடஅளறு - நஞ்சுக்குழம்பு. வெம்காகோதரம் - கொடிய பாம்பு. பணி - படத்தையுடையது. பாம்பு. பணம் படம். காற்றி-சொரிந்து. கால் என்னும் பகுதியடியாகப் பிறந்த பிறவினை வினைஎச்சம். அண்ணல்-பெருமையிற் சிறந்த. முழவு-மத்தளம். ( )

தடம்வைத் தடர்ந்தேறு கறைஅடிச் சிறுநடைத்
தந்தா வளப்பிடிக ளும்
தடவுக் குழைச்செவி கழற்கால் முகந்தெறி
தடக்கைக் கடாயானை யும்

சுடர்வைத்த கொன்பிறை நுழைந்தேறு கொண்டலில்
துளைபடா முனைமருப் புத்
துடிஅடிக் கன்றுநின் றூடுந் தடாகத்
துறைப்புனல் பரந்து வெள்ளிப்

புடம்வைத்து வார்த்தனைய பொங்குமா கடல்அருவி
பொன்னுமுத் துங்கொழிக் கும்
பூலோக கைலாய கிரியென் றுயர்ந்துமைப்
புயல்முக டுரிஞ்சுபொன் அம்

குடுமித்ரி கூடத் தடஞ்சாரல் வளநாட
கொட்டிஅருள் சப்பாணி யே
கொழிதமிழ் இலஞ்சிவரு குமரகுரு பரமுருக
கொட்டிஅருள் சப்பாணி யே.

(அ - ரை.) கறை அடி - உரல்போன்ற கால். தந்தாவளப் பிடிகள் - பெண்யானைகள். கடாயானை - களிறு. துளைபடா - துளைசெய்யப்படாத. மருப்பு - கொம்பு. துடி - உடுக்கை. மைப் புயல் - கருமேகம். (௩௪)

மறந்தலை மயங்கர விலங்கிலை வலங்கல்வேல்
வாங்குபு திரித்துமரு வார்
மடியத் துறந்தடியர் பொன்உலகு வாழ்வித்த
வரதாப யங்கள்என் று

சிறந்தமலை யாசலச் செந்தமிழும் அருமறைத்
தெய்வப் பழம்பாட லும்
சென்னா முகந்துபல் நாளும் தவங்கள்புரி
செல்வர்வந் தேத்துவது போல்

நறுந்தளிர்ச் செந்தா மரைக்காடு தைவந்து
நறைவண்டு முரலுவது போல்
நடைபயில் பசும்புரவி புடைபயில் விசும்பிரவி
நான்மூன்று முறையிடுதல் போல்

குறுந்தொடி புலம்புகை சிவந்தொளி ததும்பநீ
கொட்டிஅருள் சப்பாணி யே
கொழிதமிழ் இலஞ்சிவரு குமரகுரு பரமுருக
கொட்டியருள் சப்பாணி யே.

(அ - ரை.) மறம் - வீரம். தலைமயங்கு - கலக்கும் இலங்கு. இலை - விளங்குகின்ற இலைவடிவான. வாங்குபு - வாங்கி. மலையா

சலம் - பொதிகைமலை. காடு - கூட்டம், தொகுதி. தைவந்து - தடவி, : தைவா பகுதி. முரலுவது - ஒலிப்பது. நான்மூன்று - நான்குமூன்று பன்னிரண்டு. விசும்பிரவி-ஆகாயத்தில் இயல்கின்ற சூரியர். குறுந்தொடி - சிறிய தொடி என்னும் அணி. புலம்பு - ஒலிக்கின்ற. (௩௫)

வித்துமுளை வைத்துவெண் பார்கோலி ஒருமித்து
வெள்ளிக் குருத்துவிட் டு
வேர்ஊன்றி விற்கூன் நிமிர்ந்தெளிந் தள் இலை
விரித்துக் கருக்குவைத் துப்

பைத்தரை திரண்டுபொதி யாய்க்கமம் சூல்கொண்டு
பச்சைப் பசும்பாம்பு போல்
பருவக் கருக்கொண்டு பச்சென் றிளங்கதிர்
பயந்துபரி போற்கவிழ்ந் து

முத்துவிளை வித்துருமம் ஒத்துவாய்த் தீர்ங்குலை
முதிர்ந்துபொன் போல்விளைந் து
மொய்வரம் பறியாது தெற்றலா டிக்கழனி
முற்றுமுடி வைத்தழைத் துக்

கொத்துமலி செந்நெல்செறி தென்ஆரி நல்நாட
கொட்டி அருள் சப்பாணி யே
கொழிதமிழ் இலஞ்சிவரு குமரகுரு பரமுருக
கொட்டி அருள் சப்பாணி யே.

(அ - ரை.) அள்இலை - கூரிய இலை. கமம் - நிறைவு. கருக்கொண்டு - கருப்பமுற்று. பரி - குதிரை. வித்துருமம் - பவளம். ஈர்ங்குலை - குளிர்ச்சியான குலை. தென் ஆரி-தெற்கிலுள்ள ஆரிய நாடு. (௩௬)

மூப்பாண்ட கூடலின் முதற்பாண்டி யன்புதல்வி
மும்முலைக் கன்னி பொன்னின்
முடிசூடி அடிமரபின் முறைநெறித் திசைவென்றி
முன்னிப் படர்ந்தஞான் று

மாப்பாண்ட வாதியர்தம் மரபாண்ட கொண்டல்முதல்
மற்றுள்ள கடவுளர்எ லாம்
வான்ஓங்கு மீனக் கொடிக்குப் புரம்சாய்ப்ப
வலன்ஏந்து மாலைசூட் டும்

தேப்பாண் டரங்கற்கு முடிசூட்டி என்அம்மை
திருவயிறு வாய்த்தளித் த
திறல்ஓங்கும் உக்கிரப் பெருவழுதி ஆகிஅத்
திருமரபில் வந்துதித் த

கோப்பாண் டியற்கும்ஒரு குலதெய்வம் ஆனவன்
கொட்டிஅருள் சப்பாணி யே
கொழிதமிழ் இலஞ்சிவரு குமரகுரு பரமுருக
கொட்டிஅருள் சப்பாணி யே.

(**அ - ரை.**) மூப்பு **ஆண்ட - பழமை** அல்லது **முதுமையை** மேற்கொண்ட. கூடல் - **மதுரை**. மும்முலைக்கண்ணி - மூன்று கொங்கைகளுடன் மலயத்துவச பாண்டியன் மகளாகத் தோன்றிய தடாதகைப் பிராட்டியரென்ற அங்கயற்கண்ணி. திசை வென்றி - திக்குவிசயம். படர்ந்த ஞான்று - சென்றபொழுது. மா பாண்டவ ஆதியர் தம்மரபு - பெரிய பாண்டவர்கள் முதலியவர்கள் பிறந்த சந்திரகுலம். வலன் ஏந்துமாலை - வெற்றிக்குறியான மாலை. தே - தெய்வத்தன்மை. பாண்டரங்கற்கு - பாண்டரங்கம் என்னும்கூத்தாடும் சிவபெருமானை சோமசுந்தரபாண்டியனுக்கு. திருவயிறு வாய்த்து - கருப்பமடைந்து. திறல் - வெற்றி, வீரம். கோப்பாண்டியற்கு - பாண்டிய மன்னனுக்கு. (௩௭)

வீண்பொறை கிடந்தஎன் மனப்பாண் குருக்கத்தை
மெய்ப்பதம் அமைத் தமைபடா
வேதநூற் பகட்டினை உயர்த்தற நுகம்சேர்த்து
வெல்வினைக் கோரைபோக் கித்

தூண்பொறை கிடந்திட்ட சஞ்சிதக் குத்தியை
துத்திப் பரிந்துழுது நிர்த்
தூளிபட லஞ்செய்யும் அவுத்திரி கன்புரம்
சூழ்ந்துதவ வேலிகோ லிக்

காண்பொறை நெல்வித்திப் பிராரத் துவப்பெருங்
களைபறித் தாகாமி யக்
கருநோய் வரா தருட் புனல்வார்த்து ஞானக்
கரும்புவிளை வித்துநிமி ரா

கோண்பொறை நிமிர்த்தவெண் பிறைமுடிக் குருமதலை
கொட்டிஅருள் சப்பாணி யே
கொழிதமிழ் இலஞ்சிவரு குமரகுரு பரமுருக
கொட்டிஅருள் சப்பாணி யே.

(அ - ரை.) குருக்கம் - வயல். வேதநூற் பகட்டினை - வேத சாத்திரமாகிய எருதை. அறநுகம் - தருமமாகிய நுகத்தடி. சஞ்சிதக் குத்தி-அனுபவியாமல் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் வினைத் தொகுதியாகிய குடுவை. கோலி - அமைத்து. வித்தி - விதைத்து. பிராரத்துவம்-எடுத்த பிறப்பில் நுகர்ந்துவரும் வினை. ஆகாமியம் - எடுத்த பிறப்பிற்செய்த வினைக்கூட்டம். அருட்புனல் - அருளாகிய நீர். கோண் - வளைந்த. பொறை - பாறை. பிறைமுடிக்குரு மதலை - சந்திரனைச் சூடியுள்ள சிவபெருமானுக்குக் குருவாக விளங்கிய குழந்தையே. இதனால் சாமிநாதன் என்ற பெயர் முருகனுக்கு ஏற்பட்டது. மெய்ஞ்ஞானம் இனிமை பயப்பதாகலின் ஞானக்கரும்பு என்றார். (௩அ)

மன்றுதொ ருடல் உவந்தவர் கயிலையும்
மணிமா டக்கந் த
மாதன பூதர மும்பொன் மயில்கள்
மலர்க்கா விற்கார் கள்

துன்றுதொ ருடல் உவந்த பரங்கிரி
மலையும் தொலையா த
சூரலை வாய்விடு சீரலை வாயும்
தொழுதிரு வேரக மும்

நன்றுதொ ருடலும் வந்தருள் செல்வி
நயக்குந் திருஆவி
னன்குடி யும்பழ முதிர்சோ லைப்பழ
நாகமும் ஆகநெ டும்

குன்றுதொ ருடலும் வந்தருள் சேவக
கொட்டுக சப்பா ணி
குறுமுனி பரவும் இலஞ்சிக் குருபர
கொட்டுக சப்பா ணி.

(அ - ரை.) மன்றுதொறு ஆடல் உவந்தவர் - அம்பலங்கள் எல்லாம் நடனமிடவிரும்பியவர். பூதரம் - மலை. கார் - மேகம். துன்று - நெருங்கு. சூர்அலைவாய்விடும் - சூரபத்மனை அலைத்தல் செய்யும். சீரலைவாய் - திருச்செந்தில். ஏரகம் - சுவாமி மலை. ஆவினன்குடி - பழனிமலை. பழமுதிர்சோலை - திருமாலிருஞ் சோலைமலையாகிய அழகர்மலை. நாகம் - மலை. குன்றுதொறு ஆட லும் - எல்லாக் குன்றுகளிலும் (பொருந்தி). (௩௧)

உரவு கிடந்த நெடும்புனல் ஆடை
உவந்து கிடந்துடை யாள்
உபய பயோதர மீதுகிடந்த பொன்
உத்தரி கம்போ லப்

பரவு கிடந்த தடங்கிரி அருவிப்
பாங்கர் கிடந்ததி னைப்
பரணி நடந்து பரித்த பசுந்தளை
கட்டிய பட்டுடை நெட்

டரவு கிடந்த அகன்பேர் அல்குல்
அணங்கு கனங்குழை போல்
ஆசை கிடந்த கருங்கட் குவளையின்
அருகே முருகவிழ் பூங்

குரவு கிடந்த தடம்புய பூதர
கொட்டுக சப்பா ணி
குறுமுனி பரவும் இலஞ்சிக் குருபர
கொட்டுக சப்பா ணி.

(அ - ரை.) உரவு - பரப்பு, வலிமை. உபயபயோதரமீது - இரண்டுகொங்கைகள்மேல். உத்தரிகம் - மேலாடை. தினைப் பரண் - தினைப்பயிரைக் காக்க அமைத்த பரண்இடம். அரவு கிடந்த - பாம்பை ஒத்த. முருகு அவிழ் - மணம் விரிகின்ற. புய

பூதரா - தோள்களாகிய மலைகளையுடையவனே!. குறுமுனி - அகத்திய முனிவர். பரவும் - போற்றும். (௪௦)

அழகு குறவர்தம் மகளிர் திருநுதல்
அப்பிய கத்தூரி
அணியும் முலைகளில் இழுகு புழுகுடன்
மணந்த திருப்பாணி

ஒழுகு நவமணி ஒளிவிடு கடகமும்
உத்தரி கத்தோள் மேல்
உதய கிரிகளில் உலவிய பரிதிகள்
ஒத்த குழைக்காதும்

மழலை வரிஅணி முரல முகைஅவிழ்
கடப்ப மலர்த்தாரும்
மரகத கலவநி ருபகுல துரக
வட்டமும் முட்டாத

குழைவும் அழகிய குழல்மொழி குலமணி
கொட்டுக சப்பாணி
குமர குருபர! சரவண! பவகுக!
கொட்டுக சப்பாணி.

(அ - ரை.) நுதல் - நெற்றி. இழுகு - ஒழுகு. புழுகு-புனுகு. பாணி - கை. கடகம் - காப்பு. அளி - வண்டு. முகை - மொட்டு. மரகத கலவ - பச்சை நிறம் பொருந்திய தோகைமயில்வாகன!. துரககுலம் - குதிரைக்கூட்டம். குழல்மொழி குலமணி - குழல் மொழியம்மையின் குலத்துக்கு மாணிக்கம் போன்றவனே. 'குழழ் வாய்மொழி மங்கை' - திருக்குற்றாலத்துத் தேவி பெயர் (திருக் கோவையார் - 94.) (௪௧)

ரு. முத்தப்பருவம்

நெகிழா வரிவண் டினமுரலா
நிரலா இருந்து விருந்தருந்தும்
நெய்தற் கருங்கா னலந்துறைவெண்
நிலவுக் குடவால் வளைமுத்தும்

திகழ்ஆர் கலியின் கொழும்பவளச்
செழுங்கா டடர்ந்து படர்ந்தேறித்
தெற்றும் பணைமா மருதவயற்
செங்கட் கரும்பிற் செறிமுத்தும்

இகழாப் புறவத் திழிகான்யாற்
றிறங்கும் இபக்கோட் டிழிமுத்தும்
இலஞ்சிக் குறிஞ்சிக் கிளைமுத்தும்
ஏந்தேம் நின்பால் இரந்தேமால்

முகிழா மலர்ப்பூங் கடம்பாநீ
முத்தம் தருக முத்தமே
முருகா குமரா முத்தையா
முத்தம் தருக முத்தமே.

(அ - ரை.) முத்தப் பருவம் :—இது, பதினோராவது திங்களில் நிகழ்வது. இது பிள்ளையை முத்தமிடும்படி வேண்டிக் கூறும் பருவம். முத்தம் - உதடு, கொஞ்சுதல். நெகிழா முரலா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள் செய்து என்னும் பொருளில் வந்துள்ளன. நெகிழ்ந்து முரன்று என்று பொருள் படும். குடவால்வளை-குடம்போல் வளைந்த ஒள்ளிய சங்கு. ஆர்கலி-கடல்; நிறைந்த முழக்கமுடையது. தெற்றும் - அலைக்கும், தடைப் படுத்தும். பணை - வயல். செறி - பொருந்திய. இபக்கோட்டிழி முத்தும் - யானைக் கொம்பினின்றும் ஒழுகும் முத்தும். இரந்தேம்-வேண்டினோம். கடம்பா - கடப்பமாலையணிந்தவனே! (சஉ)

கடவுட் பொருநைக் கடற்றுறையும்
கன்னித் துறையும் பொன்னிநதிக்
கடலங் துறையும் பொங்குபுனற்
கங்கைத் துறையும் தங்குகழி

நடவுங் குடவால் வளைமுத்தம்
சலாகைப் பருவத் தடைபட்டாம்
சலாபத் திகளாம் சமுதாயத்
தரவாம் போதி தணவாமல்

குடமுட் கனியின் சுளைபிதிர்ந்து
கொழுந்தேன் ஒழுகிச் செழுந்தேமாங்
குவவுக் கனியைச் சுழித்தரம்பைக்
குலத்தைப் பழித்து மணங்கொழிக்கும்

முடவுப் பலவின் முளைத்தவன்சேய்
முத்தம் தருக முத்தமே
முருகா குமரா முத்தையா
முத்தம் தருக முத்தமே.

(அ - ரை.) கடவுட் பொருநை - தெய்வத்தன்மை யமைந்த தண்பொருநை என்னும் தாம்பிரபருணி. கன்னித்துறை - தென் கடல் முனையாக விளங்கும் கன்னியா குமரி. பொன்னி-காவிரி. சலாகை - அகன்மணி. சலாபத்திகள் - முத்துக் குளிப்பவர்கள். தணவாமல் - நீங்காமல். போதி - மலை. முட்கனி - பலாப்பழம். பிதிர்ந்து - சிதறி. தேமா - இனிய மாமரம். அரம்பைக் குலம் - வாழைக் கூட்டம். முடவு - வளைவு. பலவின் முளைத்தவன் சேய் - திருக்குறும்பலா ஈசன் குமாரனான முருகன். (௬௩)

சத்தம் இருந்த முதுமறையோன்
தண்அம் கயிலைத் தடம்சாரல்
தடங்கோட் டிடபம் தனைத்தாழ்ந்து
தனக்கென் றன்னம் இரந்திட்டான்

அத்தம் இருந்த சுடர்ஆழிப்
பெருமான் அன்று மாவலிபால்
ஆழிப் புவனம் இரந்திட்டான்
அருமா தவத்துக் கன்னியர்தம்

சித்தம் இரந்தான் எம்பெருமான்
சிறியேம் இரத்தல் பிழையாமே
தெய்வத் தமிழ்தேர் தென்இலஞ்சி
சைவக் கொழுந்தே தீங்கனிவாய்

முத்தம் இரந்தேம் நின்பாலாய்
முத்தம் தருக முத்தமே
முருகா குமரா முத்தையா
முத்தம் தருக முத்தமே.

(அ - ரை.) சத்தம் - முழக்கம், ஒலி. தடம்சாரல் - பெரிய மலையடிவாரம். இடபம் - நந்தி. அத்தம் - கை. சுடர் ஆழிப்பெருமான் - விளங்குகின்ற சக்கரத்தையுடைய திருமால். ஆழிப்புவனம் - கடலாற் சூழப்பட்ட பூமி. கன்னியர் - கலியாணமாகாத இளம் பருவப் பெண்டிர். சிறியேம் - சிறியவர்களாகிய நாங்கள். இரத்தல் - வேண்டுதல். தீங்கனி - இனிய பழம். கனி - ஈண்டு கோவைப் பழம். (சச)

தென்னர் இலஞ்சிப் பெருமான்நின்
திருத்தா மரைக்கைக் கொடைக்குடைந்து
செல்லும் செல்லும் திருத்தாதைத்
திருமா மறுகுக் குடைந்தசங்கு

மன்னர் மறைகள் முறையிடுநின்
மலர்த்தாட் குடைந்த கமலமுநின்
மதுரம் துளிக்கும் சிறுகுதலை
மழலைக் குடைந்த வான்கரும்பும்

மின்னிற் குடைநுண் இடைக்குறப்பெண்
வெருவப் புகுந்துன் வேற்குடைந்த
வேழப் பொருப்பும் தருமுத்தம்
விழைந்தால் கிடைக்கும் வேண்டகிலேம்

முன்னர்க குருமா முனிபணிசேய்
முத்தம் தருக முத்தமே
முருகா குமரா முத்தையா
முத்தம் தருக முத்தமே.

(அ - ரை.) திருத்தாமரைக் கைக்கொடைக்கு உடைந்து - அழகிய செந்தாமரை மலர்போன்ற கைவழங்குங் கொடைக்குத் தோற்று. செல்லும் - மேகமும். மாமறுகு - பெரிய தெரு. குதலை - மழலை மொழி. வான்கரும்பும் - சிறந்த கரும்பும். மதுரம் - இனிமை.

மின்னிற்கு உடை - மின்னலுக்குப் பின் வாங்கு. வெருவ - அஞ்சும்படி. வேழப் பொருப்பும் - யானையாகிய மலையும். விழைந்தால்- விரும்பினால். வேண்டகிலேம் - விரும்புகின்றிலம். குருமாமுனி பணிசேய் - குருவாக விளங்குகின்ற சிறந்த அகத்திய முனிவனும் வணங்குகின்ற முருகக்கடவுளே! (சரு)

செக்கச் சிவந்த செழுங்கமலச்
சிமிழ்வாய் திறந்த திருமுத்தும்
செந்நெற் படப்பை செறியிலஞ்சிக்
கன்னற் றிரளில் திரள்முத்தும்

எக்கர்ப் படுகர் இழிகான்யாற்
றிறங்கும் இபக்கோட் டிமிழ்முத்தும்
எங்கோன் இருக்கும் திரிகூடத்
தேலாப் புறத்திற் கிளைமுத்தும்

மைக்குள் குளிக்கும் படிகுளிக்கும்
மலைவாணர் சலா பத்துமுத்தும்
வந்தாற் குறப்பெண் நகைஉறைக்கு
வைத்து மதுரத் துளிதுளும்ப

முக்கட் கனிக்கும் இனிக்குநின்வாய்
முத்தம் தருக முத்தமே
முருகா குமரா முத்தையா
முத்தம் தருக முத்தமே.

(அ - ரை.) செக்கச் சிவந்த - மிகச் சிவந்துள்ள. சிமிழ் - செப்பு. முத்து - முத்துப்போன்ற பல். படப்பை - வயல். கன்னல் திரள்-கரும்புக் கூட்டம். எக்கர்ப் படுகர் - மணல்மேட்டை உடைய மருத நிலத்து அல்லது மணல் மேட்டை உடைய ஆற்றங்கரையை அடுத்த வயல். இபக்கோடு - யானைத்தந்தம். மைக்குள் - மேகத்துள். துளும்ப - ததும்ப. (சகூ)

கழிபிறப்பும் தொலையநிற்கும்
கவிஞர்சித்தம் பெருகவே
கயிலைவெற்பும் பொதிகைவெற்பும்
கடவுள்வெற்பும் தகையவே

தழுவு பொறகுங் குமமுலைக்கண்
தனிசுவைக்கும் பவளவாய்
தனைமுகக்கும் செவி லிகைக்கும்
தளிர் அடிக்கும் தகையவே

பொழி மதத்தன் புகர்முகத்தன்
புடையில் நிர்த்தம் புரியவே
புனல்முடிக்குங் கடவுள் அப்பன்
புதுநகைக்கும் குறுகவே

குழல்மொழிப்பெண் கயிலிருக்கும்
குழவிமுத்தம் தருகவே
குறுமுனிக்கன் றருள்சுரக்கும்
குமரன் முத்தம் தருகவே.

(அ - ரை.) கழிபிறப்பு - எத்தனையோ பிறப்பு. தகைய - இளைப்படைய. சுவைக்கும் - ருசிபார்க்கும், உண்ணும். யானைக்குக் கன்னமதம், கபோலமதம், பீசமதம் என மூன்று மதங்கள் உண்டாதலின் பொழிமதத்தன் என்றார். புகர்முகத்தன் - புள்ளி உள்ள முகத்தையுடைய யானைமுகக்கடவுள். புடை - பக்கம். நிர்த்தம் புரிய - நடனம் செய்ய. புனல் - கங்கை நீர். நகை - சிரிப்பு. (௬எ)

கழை சுழிக்கும் கயமு கத்தெம்
கடவு ளைக்கண் டடவிசூழ்
கடிபு னத்தன் றொருகு றப்பெண்
கரம்நெ ரித்தஞ் சினவளாய்த்

தழைஉ டுத்தங் கயல்வ ரச்சந்
தனம ணக்கும் தன்கடாம்
தழுவி முத்தம் தருகெனத்தந்
துருகி நிற்கும் தலைவநீ

பொழிம தச்செண் பகவ னத்தெம்
புனிதன் முத்தும் பொழுதெலாம்
புயவ ரைக்கண் பதிய வைக்கும்
புதும லர்ச்செஞ் சரணன்நீ

கொழித மிழ்த்தென் புவிபு ரக்கும்
குரிசில் முத்தம் தருகவே
குறுமு னிக்கன் றருள்சு ரக்குங்
குமரன் முத்தம் தருகவே.

(அ - ரை.) கழை - கரும்பு. சுழிக்கும் - வளைக்கும். கயமுகம் - யானைமுகம். தழை உடுத்து - இலை உடை அணிந்து. புயவரைக்கண் - தோளாகிய மலையில். புனிதன் - தூயன். கொழி - வடிதெளி. (௪அ)

கன்னலங் காடுதன் மொய்த்தவெண் முத்தம்
கருப்பாலை புக்கரை படும்
கழனித் தடஞ்சாலி வெண்முத் தெருத்தின்
கவைக்கால் மிதித்துடை படும்
துன்னலஞ் சுடர்முத் திபக்கோட்டில் உண்டது
துரக்குபு மடங்கல் ஏறு
துத்திக் குருத்தொடு பிடுங்கச் சிதர்படும்
துளைகொள்நாள் முளரி முத்தம்
பன்னலங் காட்டினும் பாய்ந்தள று படுநெடும்
பரவைக் கழிக்கானல் வாய்ப்
பணிலமுத் தெல்லாம் புலால்படுந் தெய்வப்
பதிக்கெலாம் பழையபதி ஆம்
தென்இலஞ் சிப்பதித் தேவசேனாபதி
திருப்பவள முத்தம்அரு ளே.
சேணோங்கு மாடத்ரி கூடச் சிலம்பன்
திருப்பவள முத்தம் அருளே.

(அ - ரை.) கன்னலங்காடு - கரும்புக்காடு. அரைபடும் - அரைக்கப்படும். கழனி - வயல். சாலிவெண்முத்து - நெல்லில் பிறக்கின்ற வெள்ளிய முத்து. எருத்தின் கவைக்கால் - எருதுவின் பிளவு பட்ட கால். துரக்குபு - துரத்தி. சிதர்படும் - சிதறும். துளைகொள் நாண்முளரி - துளையைக்கொண்ட அன்றலர்ந்த தாமரை. பரவை - கடல். கழிக்கானல் - கழிக்கடற்கரையுள்ள சோலை. பணிலம் - சங்கு. புலால்படும் - புலால் நாற்றம் உண்டாகும். தேவசேனாபதி - தேவர்கள் படைக்குத்தலைவன். சேண் ஓங்குமாடம் - விண்ணளவு உயர்ந்துள்ள மாடங்கள். திரிகூடச் சிலம்பு - திருக்குற்றாலமலை. (௪௯)

வானோங்கு முப்புடைப் பைங்காய்க் குலைத்தெங்கின்
மடல்வீழ்ந்து நெற்றுவீழ்ந்து
வாள்அர வுடன்திங்கள் முறிபட்டு வீழ்ந்ததென
மருதமுரு டிடறிமது ரக்

கான்ஓங்கு வெள்ளிமுறி கல்என் றொலித்தலும்
கருவிரல்வெள் உகிர்வளைக் காற்
காய்த்திட்ட செம்பிட்ட நெடியவற் கூன்புறக்
களியுடற் குளிகட் குறும்

பேன்ஓங்கு சிறுநரைப் புன்தலைக் கடுவன்
பிணாவீழ்ந்த தென்றுபத றிப்
பேதுற் றிமைத்திமைத் தலமருதல் கண்ணுறீஇ
பிணவுந் திணங்குபு தழீஇ

தேன்ஓங்கு மணம்உயர் இலஞ்சிவள நாடன்
திருப்பவள முத்தம்அரு ளே
சேண்ஓங்கு மாடத்ரி கூடச் சிலம்பன்
திருப்பவள முத்தம்அரு ளே.

(அ - ரை.) முப்புடைப் பைங்காய் - மூன்று பகுதியாகப் புடைத்திருக்கின்ற இளந் தேங்காய். வாள்அரவு - ஒளிபொருந்திய பாம்பு. திங்கள் - சந்திரன். வெள்ளிமுறி-வெள்ளியின்முறி. கரு விரல் வெள் உகிர்வளைக்கால் - கறுத்தவிரலும் வெள்ளிய நகமும் வளைந்த காலும். கடுவன் - ஆண்குரங்கு. நரைபுன்தலை - நரை மயிரை உடைய சிறிய தலை. பிணா - பெண்குரங்கு. பேதுற்று - கலங்கி. அலமருதல் - வருந்துதல். (௫0)

கைப்பவள மாணிக்கக் கடகம் சிலம்பு பொற்
காறைகை வங்கி காப்பு
கனககொந் தளஓலை வெண்முத்து மாலிகை
கலந்தொளி நெருங்கிடமருங்

கெய்ப்பவள ருந்தனக் குன்றும் குழற்காடும்
ஏந்திழை நலார் கிளைஞர்
இனியமடல் எழுதுதென் காசிக்கு முத்தமிழ்
இலஞ்சிப் பதிக்கும்எங் கோன்

வைப்பவள ருஞ்சுப்ர மணிய புரத்திற்கும்
வளர்ஆறு முகநகர்க் கும்
மருதத் தடஞ்சாலி சூழ்பிரான் ஊருக்கு
மன்னுபொன் உலகம்என் று

செப்பவளம் ஓங்குநன் னகர்க்கும்ஒரு வேந்தன்
திருப்பவள முத்தம் அருளே
சேண்ஓங்கு மாடத்ரி கூடச் சிலம்பன்
திருப்பவள முத்தம் அருளே.

(அ - ரை.) கடகம் - காப்பு. சிலம்பு - காலணி. பொற்காறை - கழுத்தில் அணியும் பொன்கம்பி அணி. வங்கி - முழங்கைமேல் அணியும் வளைவணி. கனகொந்தள ஓலை - பொன்னால் ஆகிய மயிர் குளிர்ச்சி ஓலை. மாலிகை - மாலை. மருங்கு எய்ப்ப - இடை தளர. நலார் கிளைஞர் - அழகு சிறந்தவராகிய பெண்கள் உறவினர். மடல் - மடலில் எழுதுதல். கோன் - வேந்தன்: கோ என்ற சொல் னகரச்சாரியை பெற்றது. (ருக)

௬௩. வாரானைப்பருவம்

கண்டாய் இல்லைப் போலும்இது
கரத்துக் கிசைந்த குறுந்தொடிநின்
காதுக்கிசைந்த மாணிக்கக்
கதிர்ப்பூங் குழைமற் றிதுகாற்காம்

தண்தா ரகைபோல் மணிகிடந்த
சதங்கை வடமற் றிதுநினக்குத்
தரவேண் டாவோ வந்தால்இத்
தனையும் புனையும் தரம்ஆமே

விண்டா ரணங்கள் வழுத்தரிய
விழுத்தாள் இணையும் அருள்பழுத்த
வெண்மூ ரலுமூ விருமுகமும்
விளங்கப் புகுந்தென் மனக்கோயில்

கொண்டாய் வருக தமிழ்இலஞ்சிக்
குமரப் பெருமான் வருகவே
குடுமிச் சுடற்வேற் படைஉடைய
கோமான் வருக வருகவே.

(அ - ரை.) வாரானைப்பருவம்: இது பதின்மூன்றாவது திங்களில் நிகழ்வது. இது தோழியர்கள் பிள்ளை நடந்து வருதலை விரும்பி அழைக்கும் பருவம். வாரானை - வருகை. ஆனை:தொழிற் பெயர் விகுதி. கரத்துக்கிசைந்த குறுந்தொடி - கைக்குப்பொருத்த மான சிறு வளையல். தண்தாரகை-குளிர்ந்த நட்சத்திரம். இத்தனை யும் புனையும் தரம் ஆம் - இவைகளை எல்லாம் அணியும் தகுதி உண்டாம். ஆரணங்கள் - வேதங்கள். விண்டு - வாய்திறந்து. வழுத்தரிய விழுத்தாள் இணை - புகழ்தற்கு முடியாத இரண்டு திருவடிகள். மனக்கோயில் - உள்ளமாகிய கோயில். கோமான் - தலைவன்: மான் ஈற்றுப்பெயர்ச் சொல். (௬௨)

ஆர்க்குங் கனகத் தாள்பந்தத்
தழுத்தும் வயிரச் சுட்டிகிடந்
தசைந்தே இசைந்த மலர்க்கடம்பத்
தலங்கற் குடுமி ஒடுமலங்கச்

சேர்க்குங் குரல்வாய்ச் சிறுசதங்கை
சில்லென் றலம்பப் பொலஞ் சிலம்பு
சிலம்பச் சிலம்பிற் சிங்கத்தின்
சிறுகன் றென்னச் சிற்றடியார்

பார்க்குந் தவம்போல் நடைபழகிப்
பழகு மடவார் தளிர்க்கைவிரல்
பாய்ந்து பிடித்து நடந்திளைத்துப்
பனிவேர் வரும்பிச் செவிலிமுகம்

கூர்க்குங் குறிப்பும் குறுநகையும்
குழைவும் அறிந்தேம் வருகவே
குடுமிச் சுடர்வேற் படைஉடைய
கோமான் வருக வருகவே.

(அ - ரை.) வயிரச்சுட்டி-வைரத்தால் ஆகிய நெற்றிச்சுட்டி. கடம்பத்தலங்கல் - கடப்பமாலை. அலங்க - அசைய. குரல்வாய்ச் சிறுசதங்கை - ஒலியைச் செய்யும் வாயினையுடைய சிறிய சதங்கையென்னுங் காலணி. சில் என்று அலம்ப - சில் என்று ஒலியைச் செய்ய. பொலம்சிலம்பு - பொன் சிலம்பு, பனிவேர்வு அரும்பி - குளிர்ந்த வேர்வை தோன்றி. செவிலி - வளர்ப்புத்தாய். கூர்க்கும் - நிறையும். (ருங)

அமளிக் கலவிக் கொடும்போரில்
அவிழ்ந்த குழலும் இடைநெறிந்த
அங்கச் சரியும் செங்குமுத
அதரச் சிவப்பும் கருங்குவளைச்

சமரக் கடைக்கண் சிவப்பும்இடை
சரிந்த உடையும் தளர்நடையும்
தழுவுங் கொழுநர் தடம்புயம்பூ
தரலே பனசந் தனச்சாந்தம்

திமிரத் திமிரத் திமிர்ந்தசெப்பில்
சின்னப் பிறைபோற் கிடந்தநக
சின்னங் களுமாய்த் துயில்எழுந்தார்
செப்பா மொழியைச் சேடியர்க்குக்

குமரிக் கிளிகள் புகழ்இலஞ்சிக்
குமரப் பெருமான் வருகவே
குடுமிச் சுடர்வேற் படையுடைய
கோமான் வருக வருகவே.

(அ - ரை.) அமளி - மெத்தை. கலவி - புணர்ச்சி. குழல் - கூந்தல். அங்கச்சரி - ஒட்டியாணம். செங்குமுத அதரம் - செவ்வாம்பல் போன்ற உதடு. சமரம் - போர். புயம் பூதரலேபன - தோளாகிய மலையில் பூசப்பட்ட வாசனைத் தைலம். திமிர - பூச. செப்பாமொழி - சொல்லாதமொழி. சேடி - தோழி. குமரிக்கிளி - இளங் கிளி. (ருச)

அடிமை வழிக்கோர் ஆள்எனக்கொண்
டருட்பால் புகட்டி மருட்பிறவி
அறுக்கும் படிவந் தெழுத்தறிவித்
தஞ்சா றேழெட்டெனும் பருவத்

துடைமைப் படுத்தி அஞ்செழுத்தும்
உபதே சித்தென் உயிர்க்குயிராய்
உணர்வுக் குணர்வாய்ப் பயின்றறியும்
உருவிற் குருவாய் உடன்கலந்து

மடமை தவிர்த்து வழிபாடு
திருத்தி மழலைத் திறம்திருத்தி
மதுரக் கவிநா வரத்திருத்தி
வலியப் பிடிசோ றமுதருத்தி

குடுமி திருத்தி எனைவளர்த்த
குருவே வருக வருகவே.
குடுமிச் சுடர்வேற் படை உடைய
கோமான் வருக வருகவே.

(அ - ரை.) அடிமை வழிக்கு - தொண்டு செய்யும் வகைக்கு. அருட்பால் - அருளாகியபால். மருட்பிறவி - மயக்கத்தை உடைய பிறப்பு. பருவத்து - காலத்து. அஞ்செழுத்து - ஐந்து எழுத்துக்களாகிய நமசிவாய மந்திரம். உணர்வுக்குணர்வாய் - அறிவுக்கு அறிவு. 'உயிர்க்குயிராய். பயின்றறியும் உருவில் குருவாய் உடன்கலந்து' என்ற அடியில் கடவுள் உயிருடன் ஒன்றாயும், வேறாயும் உடனாயும் இருப்பதும் உண்மை புலப்படுகின்றது. மடமை

தவிர்த்து - அறியாமையை ஒழித்து. மழலைத்திறம் - குதலைமொழி கூறும் தன்மை. மதுரக்கவி - நால்வகைக் கவியுள் ஒன்றாகிய மதுரப் பாடல். வலியபிடி சோறமுதருத்தி - வற்புறுத்துதலாக பிடிசோறாகிய அமுதத்தை உண்பித்து குடுமி திருத்தி-தலை அலங்கரித்து. (ருரு)

புறம்சுற் றியதெண் திரைஆழிப்
புவனப் பரப்பெ லாந்தெரிந்து
பொருள்தேர்ந் தருள்தேர்ந் தவர்க்குதவார்
புதையல் இருக்கும் இடம்தேடி

மறம்சுற் றியவேற் குறுநிலமா
மன்னர் புகுந்து துன்னுவபொன்
வாரிப் பெருங்கா வடிசேர்த்து
வழங்கா நெறிபோம் வழக்கேபோல்

அறம்கற் றறியார் குலவேடர்
அருங்கோட் டடுக்கற் புறத்துவைத்த
ஆய்பூஞ் சிறகர் ஈஇஅகற்றி
அளிதேன் கவர்ந்து கொடுபோதும்

குறிஞ்சிக் கிழவா தமிழ்இலஞ்சிக்
குமரா வருக வருகவே
குடுமிச் சுடர்வேற் படைஉடைய
கோமான் வருக வருகவே.

(அ - ரை.) புறம் - பக்கம். ஆழிப்புவனப் பரப்பு - கடலால் சூழப் பெற்ற புவனமாகிய பரந்த இடம். பொருள் தேர்ந்து அருள் தேர்ந்தவர் - தெளிந்து அவர் அருளை அடைந்த உண்மை உணர்வுடையவர். உதவார் புதையல் - ஈயாத லோபிகள் புதைத்த புதையல் (சேமிப்பு.) மறம் சுற்றிய-வீரம் சூழ்ந்த; பாவம் பற்றிய. துன்னுவபொன்-பொருந்துவனவாகிய பொன்னை. சேர்த்து-கட்டி. வழங்காநெறி - மக்கள் பயிலாத வழி. அருங்கோட்டு அடுக்கற் புறத்து - அரிய உச்சியை உடைய மலைப்பக்கம். ஆய் பூஞ்சிறகர் வாய்ந்த மென்மையான சிறகுகளை உடைய. ஈஇ - தேனீ. அளி தேன்-குளிர்ந்த தேன். கொடுபோதும்-கொண்டுபோகும். குறிஞ்சிக் கிழவா - குறிஞ்சித் தலைவனே. (ருசு)

அப்பன் வருக எனை ஆண்ட
ஐயன் வருக அமர்உலகுக்
கதிபன் வருக கயிலாயத்
தரச குமரன் வருக எங்கள்

வைப்பன் வருக குழல்மொழித் தாய்
மைந்தன் வருக கலவமயில்
மகிழ்வோ டேறித் தேவர்தொழ
வருவான் வருக அறநெறிக்குத்

துப்பன் வருக மெய்ஞ்ஞானத்
துறைவன் வருக புலம்புகுதும்
தொடியன் வருக மணிச்சுடிகைத்
தோளான் வருக துலங்குமனக்

கொப்பன் வருக மாணிக்கக்
குழையன் வருக வருகவே
குடுமிச் சுடர்வேற் படையுடைய
கோமான் வருக வருகவே.

(அ - ரை.) ஐயன் - தலைவன், அழகன். வைப்பன் - சேமநிதியாயிருக்கின்றவன். கலவமயில் - தோகையுடைய மயில். துப்பன் - வலிமையுடையவன். மெய்ஞ்ஞானத்துறைவன் - உண்மைஞானத்து ஒளிர்கின்றவன். சுடிகை - உச்சிக்குடுமி. மனக்கொப்பன் - மனதுக்கு ஒத்தவன் : மனதுக்கு என்பது மனக்கு என விகாரப்பட்டது. (௬எ)

தேந்துணர் அலங்கல்முடி இமையவர் குழாம்தொழச்
சிங்கா சனத்திருக் கும்
தேவேந் திரன்வரக் குமாரத்தி கணவனைத்
தேடித் திகைத்திருப் பக்

காந்தள்அம் சாரலில் கடிபுனம் காக்குமான்
கண்ணிக்கோர் கண்ணிவைத் துக்
களிறுதரு புணர்விஞல் புணர்ந்து பின்வரும்
களநாடி யுள்மயங் கி

ஏந்திளங் கொங்கைமார் இடைவினவி உடைவினவி
என்போக்கி நின்றுடன் போக்
கிடையீடு கைவந் தரத்தொடு நிறுத்தெயினர்
ஏற்றபடி ஆற்றுவது வைக்

கூந்தல்அம் பிடியுடன் புதுமணக் கோலமும்
கொண்டுவந் தவன்வருக வே
கும்பமுனி தஞ்சம்என நம்புதென் இலஞ்சிவரு
குமரநா யகன் வருக வே.

(அ - ரை.) தேந்துணர் அலங்கல் - தேன் அமைந்த பூங் கொத்துக்களால் ஆகிய மாலை. இமையவர் குழாம் - தேவர்கள் கூட்டம். வரு - மேம்பட்ட, வரத்தையுடைய. காந்தள் - காந் தட்பூவுடைய. கடிபுனம் - காவற்கொல்லை (தினைப்புனம்). மான் கண்ணிக்கோர் கண்ணி வைத்து-மான்போன்ற கண்களையுடைய வள்ளியைக் கவரும்பொருட்டு ஒரு வலையை அமைத்து. புணர்வி ஞல் - புணர்ச்சியினுல். களிறுதரு புணர்ச்சியானது களவை வெளிப்படுத்தக் கருவியாகும். தலைவி ஒருநாள் புனத்திற்குச் செல்லுங்கால் ஒரு மதயானை பயிரை அழித்து அவளையும் கைய கப்படுத்த நெருங்குங்கால் அரற்றினளாக, ஆங்குத் தோன்றல் ஒரு வன் விரைந்துதோன்றி யானையின் கையிற்புகுதாவகை அவளைத் தன் கையால் எடுத்து ஒருபால் அணைத்துக்கொண்டு அவ் யானை யைத் தன் கைவேலால் எறிந்து காத்தனன். அங்ஙனம் மெய்யுற்ற தனுல், அவர்க்கே மணம் நேரக்கருதி வருந்தினுள் என்று கூறிக் குறிப்பால் உணரச்செய்தல். இது பாங்கி அறத்தொடு நிற்றலின் வகை. களம் - இடம். ஆற்றுவதுவை - செய்கின்ற கலியாணப் பெண். தஞ்சம் - அடைக்கலம். (௫அ)

ஒத்தசிவ பத்தர்பரி சுத்தர்இத யத்தினின்
றுதயஞ்செய் பாநுவருக
உத்தேச லட்சண பரிட்சையின் அகப்படா
ஒளியின் ஒளி உருவன் வருக

அத்துவா வைத்துடக் கறநின்று சோதித்
தரந்தைதீர்த் தவன்வருக வந்(து)
அறிவதொரு குறிதன்ன தருளில்அறி வித்தென்னை
ஆட்கொண்ட குரவன் வருக

பத்திவலை யிற்படும் பரமஜோதி மம்வருக
பழையவா தனைஅகற் றும்
பரமபர மாதீத பரமுத்தி நல்குவர
பாரிசா தம்வருக நின்

கொத்தடியர் கூட்டத்தில் என்னையும் இருத்திக்
குறித்தபெரு மான்வருக வே
கும்பமுனி தஞ்சம்என நம்புதென் இலஞ்சிவரு
குமரநா யகன்வரு கவே.

(அ - ரை.) இதயத்தில் - மனதில். உதயஞ்செய் பானு - உதிக்கின்ற சூரியன். லட்சண பரீட்சை - இலக்கண சோதனை. ஒளிஉருவன் - சோதிவடிவன். அத்துவா - வழி. துடக்கு - பற்று. அரந்தை - துன்பம். குரவன் - ஆசிரியன். ஓதிமம் - அன்னம். பழைய வாதனை-பழைய வாசனை, முன் உணர்ச்சி. வரபாரிசாதம் - மேன்மையான பாரிசாதம் போன்றவனே. (ருக)

அநிர்வசன மாயப் பெருஞ்சலதி ஆடும்அடி
யேங்கள்உனை அடைய மாட்டேம்
அடிகளும் அனைத்தும்உடை யவனும்உடை
மைப்பொருளும் ஆதலால் அடியரேமும்

தனதுபொரு ளுடைமையில் தீராமை தேறிஒரு
தண்அளி சுரக்க வருக
தற்காக்க வருககை தரவருக வற்ருத
தண்கருணை வெள்ளம் வருக

வனசநிதி வருகவர பாரிசா தம்வருக
வளர்சுரபி வருக சிந்தா
மணிவருக என திருகண் மணிவருக என்ஐயன்
வருகஎன் அப்பன் வருக

குனிசிலைப் புருவத் திருந்திழை அருந்தவக்
குழவி இள மதிவருகவே
கும்பமுனி தஞ்சமென நம்புதென் இலஞ்சிவரு
குமரநா யகன்வருக வே.

(அ - ரை.) அசிர்வசனம் - வசனத்திற்கு (சொல்லுதற்கு) இயலாத இல்பொருள். சலதி - கடல். உடைமையில் தீராமை - அடியவர் இருக்கிறதன்மையில் நீங்காமை. வனசநிதி - பதுமநிதி. சுரபி - காமதேனு. சிந்தாமணி-எண்ணியவற்றையெல்லாம் கொடுக்கும் மாணிக்கம். ஐயன் - தலைவன். குனிசிலைப்புருவம் - வளைத்த வில்லைப்போன்ற புருவம். குழவி - குழந்தை. (சு0)

ஏறாத உச்சியில் இருக்கும் பசுந்தேனை
இருமுடவன் ஒருதனி கிடந்
தேக்கற்றும் அங்காந்தும் நின்நிலையும் என்நிலையும்
இன்னிலை எனக்கிடந் தேற

காறாத சிந்தா குலப்புன்மை தனையுமே
ஆற்றிஒரு படிதேற்று வித்
தானந்த சலதிநீர் ஆட்டிப் பராஅமுதம்
ஊட்டித்தன் அளவைகாட்டி

மாறாத சிவாநு பூதிஅருள் சிவானு
பூதிகமும் ஆக மன்னும்
மன்னுபசு கரணமும் சிவகரண மாக்கிஅருள்
மறையின் பெரும்பொருளையும்

கூறாது கூறிஎன் மனப்பெருங் கோயிலில்
குடிகொண் டவன்வருக வே
கும்பமுனி தஞ்சமென நம்புதென் இலஞ்சிவரு
குமரநா யகன்வருக வே.

(அ - ரை.) ஏறாதஉச்சி-எவராலும் ஏறமுடியாத உச்சி. இருமுடவன் ஒருதனி கிடந்து - காலும் கையும் முடமான ஒருவன் துணை ஒருவருமில்லாது தனித்து இருந்து. ஏக்கற்றும் - ஏங்கியும். அங்காந்தும் - வாய் திறந்தும். சிந்தாகுலப்புன்மை - மனவருத்தமாகிய குறைவு. ஒருபடி - ஒருவிதம். ஆனந்த சலதி - இன்பக் கடல். ஊட்டி - உண்பித்து. அனுபூதி - தானே கண்டறிந்ததும் பிறருக்குச் சொல்ல இயலாததுமான அறிவு. பசுகரணம் - உயிர்க் கருவி. கூறாதுகூறி - சொல்லாமல் சொல்லி. அஃதாவது யோகத்திலிருந்து சின்முத்திரை காண்பித்து. (சுக)

செங்கையில் இலங்கிய குறுந்தொடி புலம்பஒளிர்
திகழும்வெயில் இருள் பருகவே
செஞ்சரண பங்கய சிலம்பொலி முகந்தடியர்
செனனசா கரம் ஒழியவே

அங்கரை வடங்களொடு கொம்புமணி யுங்குலவ
அருணமே கலைஇசைய வே
அங்கதபு யங்களில்வி ளங்குபனி ரண்டிரவி
அனையவார் குழையசைய வே

கங்குல்பகல் இன்றிமலர் கண்கள்பனி ரண்டும்எழு
கருணைவா ரிதிசெறிய வே
கங்கைமக ளுஞ்சயில மங்கைஅர சுந்தமது
கயல்கள்போல் விழிகுளிர வே

கொங்குகமழ் தென்கயிலை முன்றினில் நடந்துவரு
குழவிவா ரணம்வருக வே
கும்பமுனி தஞ்சம்என நம்புதென் இ லஞ்சிவரு
குமரநா யகன்வருக வே.

(அ - ரை.) புலம்ப - ஒலிக்க. வெயில் - ஒளி. பிரகாசம். செனனசாகரம் - பிறவிக்கடல். அருணமேகலை - சிவந்த மணி மேகலை. அங்கதம் - தோள் அணி. இரவிஅனைய - சூரியனை ஒத்த. வார்குழை - நீண்ட குழையணிகள். கங்குல் - இரவு. கருணைவாரிதி செறிய - அருட்கடல் பொருந்த. சைலமங்கை - பார்ப்பதி. கொங்கு - மணம், தேன்.

(சுஉ)

எ. அம்புலிப்பருவம்

எண்இரண் டேந்துகலை வாய்ந்தும்ஒரு கார்த்திகை
இளம்பயோ தரம்உகந் தும்
எம்பிரான் சடிலகோ டீரப் பெருங்கங்கை
ஆற்றிடை வளர்ந்தும்எங் கோன்

திண்நலம் பெருகும்ஒரு கண்ணனைத் தந்தும்இந்
தீவரச் சுனைவியந் தும்
சிகரவரை இடறியும் பூச்சக்கர வாளச்
சிலம்புசுற் றித்திரிந் தும்

விண்நலம் தருமாலை வேலைநின் றேங்கமர்
வேட் கவிகை தந்தும் இவைஓர்
விகடதட மணிமகுட நிரைபழகு சரணார
விந்தனை நிகர்த்தி அந்தோ

அண்ணல்அம் சேவற் பதாகைப் பிரதாபனுடன்
அம்புலீ ஆட வாவே
அந்தண்மரு தஞ்செறி இலஞ்சிவடி வேலனுடன்
அம்புலீ ஆடவா வே.

(அ - ரை.) அம்புலிப்பருவம்: இது பதினைந்தாந் திங்களில் நிகழ்வது. இது பிள்ளையை மங்கையர்கள் இடுப்பில் வைத்துக்கொண்டு அப்பிள்ளையுடன் சந்திரனை விளையாட வரும்படி, சாம, பேத, தான, தண்டமுறை கூறி அழைக்கும் பருவம். சாமம்- இனிமையாகக் கூறல். பேதம் - ஒவ்வாமை கூறல். பேதம் - வேற்றுமை. தானம் - ஈகை கூறல். தண்டம் - வழக்கினும் ஒழுக்கினும் வழுவினாரை வழியில் நிறுத்தத் தண்டித்தலைக் கூறுதல். எண் இரண்டேந்துகலை - பதினாறு கலை. இளம்பயோதரம் - இளமுலை. சடிலகோடீர - பெருஞ்சடை. இந்தீவரம் - கருங்குவளை. பூச்சக்கர வாளச்சிலம்பு - பூமியிலுள்ள சக்கரவாளமலை (மேரு). விகடம் - கூத்து. சரணாரவிந்தன் - பாதபங்கயன். பதாகை - கொடி. அம்தண் மருதம் செறி-அழகிய குளிர்ந்த மருத நிலம் பொருந்திய.

ஓராயி ரங்கோடி தோட்டுநெட் டோடைமட்
டுமிழ்புண்ட ரீகம்என் றோ
உம்பர்கடை யுந்திருப் பாற்கடல் தாழியின்
உருட்டுதெள் அமுதம்என் றோ

கார்ஆழி விடம்உண்ட கண்டன் சடாடவி
கட்டுமலர் இண்டைஎன் றோ
கற்பகா டவிமகளிர் கத்தூரி தீட்டுகைக்
கண்ணாடி என்றெண்ணி யோ

தாரா கணக்கயலின் இரைதேர் தரப்புக்க
சக்ரவா கப்புள்என் றோ
தன்அன்னை தந்தபாற் கிண்ணம்என் றோகொண்டு
தம்மின்கள் தம்மின்கள் என்

றாராயும் மறைமுடிவில் ஆடும்இவன் ஆடுமால்
அம்புலீ ஆடவா வே
அந்தண்மரு தம்செறிஇ லஞ்சிவடி வேலனுடன்
அம்புலீ ஆடவா வே.

(அ - ரை.) தோடு - இதழ். நெட்டோடை - நீண்ட குளம். மட்டு - தேன். புண்டரீகம் - தாமரை. தாழி - பெரும்பாண்டம். கார்ஆழிவிடம் - கரிய கடலில் தோன்றிய நஞ்சு. இண்டை-மாலை. தீட்டும் - அணியும். தாரா கணக்கயலின் இரை - நட்சத்திரக் கூட்டங்களின் அமுத தாரை. புள் - பறவை. தம்மின்கள்-கொடுங்கள். மறை - வேதம். (௬௨)

தேனும் துவர்த்திடத் தித்திக்கும் மதுரவாய்த்
தெய்வப் பிணக்கள் கும்பச்
செம்பொற் படாமுலை ததும்பத் ததும்பச்
செழுந்துணர்ப் பாரி சாதக்

கான்உந்து பூந்தொடை கவின்பெறச் சூட்டிக்
கலந்தணைத் தாங்கிருப் பார்
காதற்ப்ர பாகம்வந் தலைமோத வந்தநின்
காட்சிஒரு காட்சிஅன் றோ

மோனம் தரும்பெரிய பரமாநு பூதிஇள
முலைமுகை ததும்ப ஞான
மொய்ம்மணத் தார்சூட்டு முத்திப் பெருந்திரு
மோகம்உறு சரச மான

ஆனந்த வெள்ளம்எனும் ஆறுமுக நாதனுடன்
அம்புலீ ஆடவா வே
அந்தண்மரு தஞ்செறிஇ லஞ்சிவடி வேலனுடன்
அம்புலீ ஆடவா வே.

(அ - ரை.) தேனும் துவர்த்திட-தேனும் துவர்ப்பாகும்படி. பிணுக்கள் - பெண்கள். பொற்படாம்-பொற்றுயில். கான்-வாசனை. உந்து - வீசுகின்ற. ப்ரபாகம் - பெருக்கம். தார் - மாலை. (சுரு)

வீரம் கிடந்தவாட் சூரபன் மன்ஆதி
மேவார் தமைக்குமைக்கும்
மிக்கான வேள்விகள் அனைத்தினும் தலைமைபெற்
றுன்வித்யா பாண்டித் திய

பாரங் கதப்பட்டம் உள்ளவன் கடவுளர்
பழஞ்சிறை விடுத்திறைவ னை
பட்டா ரகப்பெரும் பட்டணம் கைக்கொள்ளப்
பட்டாபி டேகம்வைத் தான்

வாரம் கிடந்தகுற வள்ளிநா யகிஇட்ட
மட்டவிழ் குராந்தொடைக் கு
மாதரசி சேர்த்திய மடற்பாரி சாத
மாலைக்கும் இடையேம் தாணி

ஆரம் கிடந்துலவு பன்னிரு புயாசலனெ
டம்புலீ ஆடவா வே
அந்தண்மரு தஞ்செறிஇ லஞ்சிவடி வேலனுடன்
அம்புலீ ஆடவா வே.

(அ - ரை.) மேவார் - பகைவர். குமைக்கும் - அழிக்கும். பட்டாரகப் பெரும்பட்டணம் - அரசர் இருக்கின்ற பெருநகரம். வாரம் - அன்பு. தொடை - மாலை. மதாணி - பதக்கம். புயாசலம்- புய அசலம், தோள்மலை. (சுசு)

நாடகப் புரவிப் பசுந்தேர் உருட்டும்இள
ஞாயிறுத யம்புரிந் து
நாட்கொண்டு படரிய கதிர்க்கெதிர் எறித்தவயிரப்
நகைப் பதேய்ப் பப் [பொடி

பாடகத் துறைமிடற் றுக்கருவி மாக்கள்இசை
பயில்மகதி யாழ்மொழியு டன்
பதினெண் பெரும்பண்ணும் ஏழிசை வடித்திசைப்
பஃறுளைப் பத்திசான் ற

மாடகம் முறுக்கிமணி வார்த்திவவு தைவந்து
வள்உகிர் வடிம்புவரு டி
மகரயாழ் வாசிக்கும் இன்னிசை உடன்பழகி
மழகதிர் எறிக்குமணி வாய்த்

தாடகக் குழைகிடந் தாடுவடி காதனுடன்
அம்புலீ ஆடவா வே
அந்தண்மரு தம்செறிஇ லஞ்சிவடி வேலனுடன்
அம்புலீ ஆடவா வே.

(அ - ரை) நாடகப்புரவி - நடனமாடும் குதிரை. படரிய - படர்ந்த. ஏய்ப்ப-நிகர்ப்ப. பாடகத்துறைமிடற்று கருவி - பாட்டின் பகுதிகளை எல்லாம் எடுத்துரைக்கும் மிடற்றுக் கருவியை உடையவர்கள். மாடகம் - வீணைமுறுக்காணி. திவவு - வீணைவலிக்கட்டு. வள் உகிர்வடிம்பு-கூரிய நகநுனி. மழகதிர் - இளவெயில். ஆடகக் குழை - பொற்குண்டலம். வடிகாது - தொங்குகின்ற காது. (சுஎ)

மேவு துங்க மயூரம் உண்டுநின்
வீர வெம்பகை களைய லாம்
வேரி தங்குதிரி கூடம் உண்டுடு
மீனுடன்தனி தவழ லாம்

பாவி என்றொரு பேரொழிந் துசெய்
பாத கங்களும் ஒழியலாம்
பானலங்கிரி வாவி தங்கிய
பாய்த டம்புனல் படிய லாம்

மூவி ரண்டுச ரோருகங்களின்
மூரல் கண்டுளம் மகிழலாம்
மோனம் ஒன்றுப தேச முன்செயும்
மூல மந்திரம் அறியலாம்

ஆவி னன்குடி மேவு கந்தனெ
டாட அம்புலி வருக வே
ஆழ் இலஞ்சியில் வேளொ டின்றினி
தாட அம்புலி வருகவே.

(அ - ரை.) துங்கமயூரம் - தூயமயில். களையலாம்-நீக்கலாம். வேரி - தேன். உடுமீன் - நட்சத்திரமீன்; மீன் - மின்னுவது. பானலம் - குவளை. படியலாம் - மூழ்கலாம். மூவிரண்டு சரோருகங்கள் - ஆறுதாமரை மலர்போன்ற முகங்கள். மூரல் - சிரிப்பு. மூல மந்திரம் - பிரணவம் ஆவினன்குடி - பழநி. வேள் - முருகன். ( )

கோடகப் படஎழும் கொய்உளைப் புரவிக்
கொடிஞ்சித் தடந் தேரின் மேல்
குலவிவலம் வரும்ஒருபன் னிருபரிதி மண்டல
கோடிகம் எழுந்ததே போல்

பாடலைக் குங்கதிர்க் கோமே தகத்திரள்
பதித்துவயி ரந்துறுத் தி
பத்மரா கக்கோடி கோடான கோடிநிரை
படஅழுத் திக்கொழுங் கால்

மாடெழு சுடர்க்கற்றை வயிடூரி யத்தகடு
வாரித் துவன்றிவிர வும்
மரகதம் அமைத்துரக மணிகள்பதி தந்துபுய
வரைமுகம் மொய்ப்பவலம் வந்

தாடகக் குழைகிடந் தாடும்வடி காதனுடன்
அம்புலீ ஆடவா வே
அந்தண்மரு தஞ்செறிஇ லஞ்சிவடி வேலனுடன்
அம்புலீ ஆடவா வே.

(அ - ரை.) கோடகம் - குதிரை, புதுமை. கொய்உளைப் புரவி - கத்தரித்த பிடரிமயிரையுடைய குதிரை. கொடிஞ்சி -

தேர்மொட்டு. கோடிகம்-பூந்தட்டு. துறுத்தி-செலுத்தி. துவன்றி-நெருங்கி. (௬௬)

குறுமுய லகன்பிடித் தாட்டாது தீர்ப்பன்உன்
கொடியகய நோய்தணிப் பன்
கோள்அராப் பகையுமுன் குரவனிலி டந்தநல்
குரவும்இர வுந்தவிர்ப் பன்

செறிபுனற் கடலில் தடந்தேர் மிசைத்தோன்று
சேட்டிளம் பரிதி போலச்
சித்தம் தழைக்குமற் றுனையும்ஒரு தன்மையில்
தீராது செல்லவைப் பன்

புறவும்இப் படியுள்ள நன்மைகள் எலாம்தரும்
புன்மைகள் எலாம்தவிர்க் கும்
பொன்அடித் தாமரை அளிக்கும்நலம் ஒன்றன்று
போந்தவர்க் கேந்திழைநலார்

அறுவர்முலை உண்டபால் மணம்அரு வாயனுடன்
அம்புலீ ஆடவா வே
அந்தண்மரு தஞ்செறியி லஞ்சிவடி வேலனுடன்
அம்புலீ ஆடவா வே.

(அ - ரை.) முயலகன் பிடித்து - முயல் உள்ளே பற்றி; முயலகன் என்னும் நோய்பற்றி. கயநோய் - எலும்புருக்கிநோய். கோள் அரா - இராகு கேதுக்கள். குரவன்-ஆசிரியன். சேட்டிளம் பரிதி - அழகிய இளஞ்சூரியன். புன்மை - தீமை. அரு-நீங்காத. ()

செம்புவழி இட்டனைய தீமூடைக் காழ்மந்தி
சென்றெருக் காலும்அறி யாச்
சேண்கிளர் மரம்பயில் அருங்கோட்டின் இடைவைத்த
செந்தேன் இருல்கிழித் து

வம்புவழி சாரலில் இதைப்புனம் காக்குமட
மகள்இருந் தமுதம்உண் ண
வண்ணப் பசுந்தினையின் நன்னிலாக் கொழுங்கதிர்
வானதி கொழித்துமருள் மாக்

கொம்புவழி குத்திப் பதந்தந் திடித்துக்
கொழுந்தேக் கிலேப்படுத் திக்
குழையளவும் வாங்கிக் குழைக்குந் தடச்சிலேக்
குன்றவர் திருத்திவிடு நெட்

டம்புவழி தேன்அருவி பாயுமலே நாடனுடன்
அம்புலீ ஆடவா வே
அந்தண்மரு தஞ்செறிஇ லஞ்சிவடி வேலனுடன்
அம்புலீ ஆடவா வே.

(அ - ரை.) தீழ்ப்பு - கீழ்மை. காழ்மந்தி - முதிர்ந்த மந்தி. இளர் - விளங்குகின்ற. வம்பு - தேன். மருள்மாக் கொம்புவழி - யானேயின் கொம்பால். நெட்டம்பு - நெடிய அம்பு. (எக)

பருவரைப் படர்சிஃனப் பாரிசா தப்பொதும்
பரின்நின் றுலாவுகட வுள்
பாகசா தனன்விழி குறுந்துளி உரைத்துழி
பார்த்துநின் றிருவர்அறி யா

ஒருவரைப் பங்கில்உடை யவள்பால் சுரந்தமுலே
உண்டசெங் கனிவாய் மலர்ந்
தோடவிடு தூதுவர் உரைக்குந் திருக்குறிப்
புணராத சூரபட லம்

கருவரை அறுத்துத் திரும்பினேன் எங்கோன்
கடைக்கணிக் குங்குறிப்புக்
கண்டுபணி கேளாத வர்க்கேது தஞ்சமஎதிர்
காணுக் கடைக்கண் சிவந்

தருவரை துளங்கிநின் றயில்வேல் எறிந்தவனே
டம்புலீ ஆடவா வே
அந்தண்மரு தஞ்செறிஇ லஞ்சிவடி வேலனுடன்
அம்புலீ ஆடவா வே.

(அ - ரை.) பாகசாதனன் - இந்திரன். இருவர்-மால்அயன். சூரபடலம் கருவரை - சூரன் கூட்டமாகிய கரியமலே. பணி கேளாதவர் - ஆணேப்படி நடவாதவர். காணு - கண்டு. (எஉ)

அ. சிற்றிற்பருவம்

மருக்காற் புன்னைப் புதுநிழல்வெண்
மணற்கால் மருங்கு நிலவெறிப்ப
மாடம் சமைத்துக் குடிபுகுந்து
மணிக்கால் இப்பி அடுப்பேற்றி

குருக்கால் செம்பொற் சிறுசுளகால்
கொழிக்குந் தளந்தேன் உலைப்பெய்து
குடவால் வளைவெண் குழிசிபொங்கக்
குழற்கால் ஆம்பல் நெருப்பமைத்து

முருக்கால் வெல்ல முடியாவாய்
முகிழ்த்துக் கவிழ்த்துக் கிடந்தாதி
முகம்வேர்த் தனம்நீ குறும்பிழைத்தால்
முற்றும் தரமோ முக்காலும்

திருக்கால் பிடித்துக் கும்பிட்டேம்
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேவே இலஞ்சிச் சினவேலோய்
சிறியேம் சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) சிற்றிற் பருவம் ஆவது, சிறுமியர் கட்டிய சிறு வீடுகளைச் சிதைத்தல். பதினேழாந் திங்களில் நிகழ்வது. மருக்கால் புன்னை - வாசனை பொருந்திய காலையுடைய புன்னை மரம். மருங்கு - பக்கம், அயல். நிலவு எறிப்ப-நிலவொளிவீச. மணிக்கால் இப்பி - மாணிக்கக் கால்களையுடைய சிப்பி. தேன் - தேனை. உலைப் பெய்து-உலையிலூற்றி. முருக்கால்-முருக்கம் பூவினால். முகிழ்த்து-மூடி. திருக்கால் - மாறுபாட்டினால். சிதையேல் - அழியாதிருப்பாய்: எதிர்மறை ஏவல் வினைமுற்று. (எங)

அம்பொற் சிறுவீட் டணிகாண
அன்னை வருவாள் பின்னையும்என்
ஆவி அனைய தோழியருண்
டவரும் வருவார் அன்னையரைக்

கும்பிட் டிறைஞ்சித் தோழியரைக்
கூடித் தழுவிக் கொண்டன்னை
கொணர்ந்த வரிசை அத்தனையும்
கைக்கொண் டெமது குலமனையின்

சம்பத் தவர்க்குக் காட்டிஉள்ளம்
தழைக்கும் படிக்கு விருந்தளித்துத்
தமியேங் களுமுண் டிளைப்பாறும்
தனையும் சதியேல் சதியேல்உன்

செம்பொன் றிருத்தாள் சென்னிவைத்தேம்
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேவே இலஞ்சிச் சினவேலோய்
சிறியேம் சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) சிறுவீட்டு அணி - சிற்றிலின் அழகு. ஆவி அனைய - உயிரொத்த. சம்பத்து - வாழ்க்கைப் பொருள், செல்வம். பெரியோரைக் கைகூப்பி வணங்குதலும், ஒத்த நிலையினரைத் தழுவுதலும் வழிபடு முறையென்பது 'அன்னையரைக் கும்பிட்டு இறைஞ்சித் தோழியரைக் கூடித் தழுவிக்கொண்டு' என்ற அடியால் விளங்கும். என்ஐ - என் தந்தை. 'உள்ளம் தழைக்கும்படி - மனம் மகிழும்படி' தமியேங்கள் - தனித்தவர்கள்: தாழ்மையைக் குறிக்குஞ் சொல். தமி - தனி. தமிழ் - தனித்தது, ஒப்பற்றது. சதியேல் - அழிவு செய்யாதே. சதி - அழிவு, கேடு. செம்பொன் திருத்தாள் - சிவந்த பொற்சதங்கையணிந்த திருவடிகள் சென்னிவைத்தேம் - தலைமேற் கொண்டேம். (எச)

கங்கைத் திருத்தாய் திருத்தனமும்
கவுரி குழல்வாய் மொழித்தாய்தன்
கதிர்ப்பூண் முலையும் கார்த்திகைத்தாய்
கனகா சலப்ப யோதரமும்

தங்கக் குடம்போல் மணிக்குடம்போல்
தாளக் குடம்போல் குடியாப்பால்
ததும்பத் ததும்பப் பிதிரோடத்
தாரோ டசையுந் திருஅரை ஞாண்

பொங்கச் செறித்த மணிநெகிழ்ந்து
புலம்பப் புலம்பிற் சிறுபண்டி
புலரப் புலர விளையாடல்
புகுந்தாய் பயந்தார் பொறுப்பாரோ

திங்கட் சடையான் கண்மணியே
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேவே இலஞ்சிச் சினவேலோய்
சிறியேம் சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) கங்கைத் திருத்தாய் - கங்கையாகிய அழகிய தாய். தனம் - முலை, பயோதரம். தரளம் - முத்து. ததும்ப - வழிய, துளும்ப. பிதிர் - துளி தார் - மாலை. பண்டிபுலர - வயிறு வாட. பயந்தார்-பெற்றவர்கள். திங்கட் சடையான் கண்மணியே- பிறையைச் சடையிற் சூடிய சிவபெருமான் நெற்றிக் கண்ணில் தோன்றிய மாணிக்கமே. (எரு)

முந்திப் பிறந்த இளங்களிற்று
முகத்தெம் பெருமான் கணத்தினுக்கு
முன்னே சிறுதே ருடன்போந்து
முதிரா முகிழ்மென் முலைஎம்பால்

புந்திக் களிப்பால் விளையாடப்
புகுந்து புழுதி யாட்டயராப்
பொன்அம் சிலம்பர் அடிமுடியில்
புனைந்தே மழலைக் கிரங்கிவரம்

தந்திப் பொழுதெம் மறுகடைந்தான்
தளங்கொண் டிளங்கோ மகன்ஈயும்
தண்டைத் திருத்தாள் வணங்கும்எம்பால்
தயவு புரியுந் தன்மைத்தால்

சிந்தித் திடில்அன் றென்றறியேம்
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேவே இலஞ்சிச் சினவேலோய்
சிறியேம் சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) முந்திப்பிறந்த - முன்னர்த் தோன்றிய. களிற்று முகத்தெம் பெருமான் - யானை முகத்தையுடைய விநாயகப் பெருமான். புழுதி ஆட்டு அயரா - புழுதியில் விளையாடி. பொன்அம் சிலம்பர் அடி - பொற்சிலம்பை அணிந்த திருவடி (சிலம்பு-சிலம்பர் போலி) புனைந்தே மழலைக்கு - சூடியவர்களாகிய எங்கள் மழலை மொழிக்கு. மறுகு - வீதி. தளம் - படை. இளங்கோமகன் - இளவரசனாகிய முருகன். தயவு - அருள். (எசு)

நச்சு மரம்தான் ஆனாலும்
நட்ட மரம்காண் தொன்றுதொட்டு
நாங்கள் அடிமை நீங்கள்எம்மை
நடத்தும் தலைமைப் பெருமான்காண்

வைச்சு மரம்தண் ணீர்வார்த்து
வளர்ப்போர் குறைக்க நினைப்பாரோ
மற்றோர் குறைவந் துற்றாலும்
மாற்றிப் புரக்க வழக்கன்றோ

கச்சை முனிந்து முகம்கறுத்துக்
கனத்துச் சினத்துக் கடக்களிற்றின்
கதிர்வாள் மருப்பை முனைமடக்கி
கதிர்க்குங் கதிர்ப்பூண் முலைக்குறத்தி

செச்சை செறிக்குந் திருமார்பா
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேவே இலஞ்சிச் சினவேலோய்
சிறியேம் சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) நச்சுமரம்-விடவிருட்சம். நட்டமரம் - நடப்பட்ட மரம். தொன்றுதொட்டு - ஆதிமுதல். நாங்கள் அடிமை நீங்கள் எம்மை நடத்தும தலைமைப் பெருமான் - உயிர்களாகிய நாங்கள் என்றும் உமக்கு அடிமையே, தாங்கள் எங்களைக்காக்கும் தலைவரே. இதனால் ஆண்டார் அடிமைத் திறமை சித்தாந்த முடிவென் றுணர்க. குறைக்க - வெட்ட. மாற்றிப் புரக்க - திரும்பக் காக்க. முனிந்து-வெறுத்து '...கச்சை முனிந்து பூண்முலை' என்ற அடியில் தனத்தின் இயல்பு குறிக்கப்படும். கதிர்ப்பூண் - ஒளிஅணி. செச்சை - செஞ்சாந்தின் குழம்பு. (எஎ)

வேறு

அறல்பாய்ந் திட்ட மணல்ஊடே
அடியேம் கட்டு சிறுவீடே
குறைதீர்ந் திட்ட பணியோடே
குடிபூந் திட்ட குறைபாடோ

இறைவாங் கச்சம் மதியாய்நீ
இடைபோந் தெற்றி விடலாமோ
திறலோன் சித்ர சபைவேலோய்
சிறியேம் சிற்றில் சிதையேலே

செறிதேன்செச்சை மகள்மார்பா
சிறியேம் சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) அறல் - கருமணல். குடிபூந்திட்ட - குடிபுகுந்திட்ட. குறைபாடோ - குறையோ. இறை - வரி. இடைபோந் தெற்றி விடலாமோ - நடுவே வந்து மோதிவிடுதல் ஆகுமா? (எஅ)

வரப்பட் டவர்எண் மரில்நால்வர்
மாற்றம் குறியாக் கொத்தடியார்
மற்றோர் நால்வர் யாங்கள்புது
மழலைத் திறத்தெம் வழிஅடியார்

தரப்பட் டவரா தலினொருத்தர்
தகையார் என்னும் வகைதேறித்
தடந்தேர் மறுகில் விளையாடல்
சமைந்தேம் சமைத்த சிறுவீடு

பொரப்பட் டெழுந்த போர்அவுணர்
புழைமா ளிகையும் சூரபன்மா
பொன்மா ளிகையும் கொடிமதிபூம்
பொலந்தேர் மறுகும் வீரமயேந்

திரப்பட் டணமும் அன்றுகண்டாய்
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேவே இலஞ்சிச் சினவேலோய்
சிறியேம் சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) எண்மரில் நால்வர் - எட்டுப் பேரில் நாலுபேர். மாற்றம் - சொல். கொத்தடியார் - கூட்டடியார். வழி அடியார் - வழி வழியடியார். தகையார் - தடைசெய்யார். சமைந்தேம்-ஒருப் பட்டேம். சமைத்த - அமைத்த. புழை - குகை. சூரபத்மனாகிய பகை அவுணன் தங்கும் மாளிகையும் தெருவும் மயேந்திர நகரும் அல்ல என்று சொல்லி, தம் சிறுவீட்டை அழிக்கவேண்டாம் என்றது குறிக்கத் தக்கது. (எக)

எந்தை இடப்பால் இருந்துலகுக்
கெம்பி ராட்டி அறம்புரக்கும்
இலங்கு கயிலா யப்பொருப்பும்
இளங்கோ மகன்நீ இனிதிருக்கும்

கந்த மாமா தனப்பொருப்பும்
காண்கிற் புரமன் றதனால்நீ
காலால் அமைத்த பணிஎல்லாம்
கையாற் செய்யக் கடவோம்யாம்

முந்தி இமவான் திருப்புதல்வி
முதல்வி வருஞான் றிருபுடையும்
மொய்பூங் கவரி காளாஞ்சி
முதலாய் ஏந்திப் புகுந்தவழி

சிந்தித் திரங்க வேண்டாவோ
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேவே இலஞ்சிச் சினவேலோய்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) எந்தை இடப்பாலிருந்து - எம் தந்தையாகிய சிவபெருமானின் இடது பாகத்திலிருந்து. பிராட்டி - இறைவி அறம்புரக்கும் - அறம்வளர்க்கும். கயிலாயப் பொருப்பு - கயிலாய மலை. கந்தமாமா தனப்பொருப்பு-கந்தமாமாதன மலை. காண்கிற்ற புரமன்று-காண்குமிடத்து இஃது ஒரு நகரல்ல. காலால் அமைத்த பணி எல்லாம் கையாற் செய்வோம் - நீங்கள் காலால் செய்யும்படி இட்ட பணியை நாங்கள் தலைமேற்கொண்டு கையாற் செய்யும் கடமை உடையவர்கள். முந்தி - முன்னர். இமவான் திருப்புதல்வி

முதல்வி - இமயமலை அரசனாகிய இமவான் தவத்தாற்பெற்ற பார்ப் பதி என்னும் தலைவி. வருஞான்று-வரும்பொழுது. புடை-பக்கம். காளாஞ்சி - தாம்பூலத் தட்டு. சிந்தித்து - எண்ணி. (அ0)

வார்க்குன் றிரண்டு சுமந்தொசியு
மருங்குற் கருங்கோ வலர்மகளிர்
மணிநீர் ஆடுஞ் சுனைக்கயல் போய்
மாமன் குறும்பு விளைத்தான்முன்

கூர்க்கும் பலிக்கன் றுழன்றுசென்று
குலமா தவத்துக் கன்னியர்பால்
குறும்பு புரிந்தான் திருத்தாதை
குனிக்குங் கருப்புச் சிலையுடன்சென்

றார்க்குந் திருமைத் துனன்ஒருவன்
ஆசைக் கொழுநர் தமைப்பிரிந்த
அணங்க னார்பாற் குறும்பிழைப்பான்
அல்லும் பகலும் அடிகள்யாம்

சேர்க்கும் சிறுவண் டலிற்குறும்போ
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேவே இலஞ்சிச் சினவேலோய்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) வார்க்குன்று இரண்டு - கச்சணிந்த சிறுமலை யாகிய தனங்கள் இரண்டு. ஒசியு மருங்குல் - தளரும் இடை. கோவலர் மகளிர் - இடைச்சியர். நீர் ஆடுஞ்சுனைக்கு அயல்போய் - குளிக்கும் குளத்தின் அருகேபோய். மாமன்-உன் மாதுலனாகிய கண் ணன். பலிக்கு - பிச்சைக்கு. திருத்தாதை - உன் அழகிய தந்தை. குலமாதவத்து கன்னியர்பால் - சிறந்த பெருந்தவத்து முனிவர்க ளுடைய இளம் பெண்களிடத்து. குனிக்கும் கருப்புச்சிலை - வளைக் கும் கரும்புவில். ஆர்க்கும் - முழக்கும். மைத்துனன் - மன்மதன். ஆசை - காதல். கொழுநர் - கணவர், நாயகர். அணங்கனார்பால் - அழகிய பெண்களிடத்து. சேர்க்கும் சிறுவண்டல் - அமைத்துள்ள சிறு மணல்வீடு. இதில் தந்தை, மாமன், மைத்துனன், இவர்கள் செய்த குறும்புத் தொழில் உம்மிடத்தும் வழிவழி அமைந்ததோ என்று கூறியபடி காண்க.

(அக)

பைஏந் தியபன் மணிஅல்குல்
பட்டத் தரசி மாருடனீ
பரிக்கும் தவிசின் பக்கம்நின்று
பணிசெய் கிற்பேம் பூங்கவரி

கைஏந் திற்பேம் காளாஞ்சி
கழற்கால் திருப்பா துகைஎடுப்பேம்
காலம் கருதித் திருஅந்திக்
காப்பும் எடுப்பேம் கருத்தாலும்

பொய்யேம் பிறிதோர் கடவுளரைப்
பொருள்என் றுணரேம் அருள்பழுத்த
பொன்னங் கிரியே உன்இரண்டு
பொற்றாட் பணிக்குங் குற்றேவல்

செய்யேங் கள்ளனக் குறியேல்நீ
சிறியேம் சிற்றில் சிதையேலே
தேவே இலஞ்சிச் சினவேலோய்
சிறியேம் சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) பைஏந்திய - படம் தாங்கிய. பரிக்கும் தவிசின் - தாங்கும் இருப்பிடம். உமக்குப் பணிசெய்வேம் - சாமரை இரட்டுவேம், காளாஞ்சிதாங்குவேம், பாதுகையும் சுமப்பேம், அந்திக் காப்பும் எடுப்பேம், மறந்தும் பிறகடவுளைப் பரம்பொருள் என்று கருதேம். செய்யேங்கள் எனக்குறியேல்-செய்யமாட்டோம் என்று கருதாதீர். (அஉ)

அலம்போந்து பல்பிறவி ஆழியில்தாழ்ந் துள்ளக்
கலம்பாழ் படாதுகரை காட்டுமீ காமா
இலம்பாடு தீர்ந்தொழிய எம்மனோர் ஏத்தும்
சிலம்பார் அடிபுனைந்தேம் சிற்றில் சிதையேலே.

(அ - ரை.) பல பிறவி ஆழியில் - பல பிறப்புக்கடலில் உள்ளக்கலம் - மனமாகிய தோணி. தாழ்ந்து - அழுந்தி. மீகாமா - மரக்கலம் ஓட்டியே. இலம்பாடு - வறுமை. எம்மனோர்-எம்போன்ற அடியார். ஏத்தும் - துதிக்கும். சிலம்பார்அடி - சிலம்பணிந்த திருவடி. (அ௩)

௯. சிறுபறைப்பருவம்

நங்கள்கொண் மூவிரு முகங்களி னுலும்வித்
தேந்திநத் தேந்து வேலை
நளினக் குடங்கையில் அடக்கும்உர வோன்சந்த
னுசல வரைப்பின் வித்தி

எங்கள்பன் னிருகுரவ ருந்தனி வளர்த்திட
எழுத்துமுதல் ஐந்தி யற்பேர்
இயல்முதல் முக்கொடி படர்ந்துதொண் ணூற்ருறு
இசைப்பனுவல் பூத்துவறிஞர்

தங்களுக் குதவாத பதகர்பாற் காய்தந்து
சாரம் குறித்து நல்கும்
தலைவர்அவர் பாற்கனிந் துணர்ந்தவர்க் கருமருந்
தாகிநாற் பொருள்பயக்கும்

செங்கழக முத்தமிழ் முழங்கும்வள நாடனே
சிறுபறை முழக்கிஅருளே
தென்னிலஞ் சிப்பதிப் பன்னிருகை மேகமே
சிறுபறை முழக்கிஅருளே.

(அ - ரை.) சிறுபறைப் பருவமாவது, சிறுபறையாகிய ஓசைக் கருவிமீது ஒலியிட்டு மகிழ்தல். இது பத்தொன்பதாம் திங்களில் நிகழ்வது. நங்கள் - நாங்கள் விரும்புகின்ற ஆறுமுகங் களினுலும். நாங்கள் : நங்கள் எனக்குறுகிற்று. நத்துஎந்துவேலை - சங்கைத் தாங்கும் கடலை. நளினக் குடங்கையில் அடக்கும் உர வோன்-தாமரை மலர் போன்ற உள்ளங்கையில் குடித்து அடக்கிய வலியவன் ஆன அகத்தியன். சலம் - மலை. வரைப்பின் - நிலத்து. வித்தி - விதைத்து. பன்னிருகுரவர் - அகத்தியர் மாணவராகிய தொல்காப்பியர் முதலியவர்கள். எழுத்து முதல் ஐந்து இயற் பேர் இயலமுதல் முக்கொடி - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணத்தையுடைய பெரிய இயல் இலக் கணம், இசை இலக்கணம், நாடக இலக்கணம் ஆகிய மூன்று கொடிகள். தொண்ணூற்ருறு இசைப்பனுவல் - தொண்ணூற்ருறு இசைப் பிரபந்தங்கள். வறிஞர் - வறுமையுடையோர். உதவாத

பதகர் - உதவாத பாவிகள். கனிந்துணர்ந்தவர்க்கு - இனிதாய் அறிந்தவர்க்கு. நாற்பொருள் - அறம் பொருளின்பம்வீடு. செங் கழகம் - செம்மையான சங்கம். பன்னிருகை மேகமே-பன்னிரண்டு கைகளையுடைய மேகமே. (அ௪)

குலைக்காந்தள் அங்கைக் குறுந்தொடி புறங்கொளக்
கொவ்வைமணி வாய்துடிப் பக்
கூர்வேற் கருங்கண் பொருந்திமை சிவப்புறக்
கொடிநெடும் புருவம்நெ றத்

தலைக்காதல் வந்தநாள் எத்தனை விருப்பம்அத்
தனைவெறுப் புந்துலங் கித்
தண்நிலா அமுதொழுகு சந்த்ரமண் டலமுகம்
தபனமண் டலம்நிகர்ப் ப

முலைக்காம்பில் முத்தம் கொடுத்தெரியும் மடநலார்
முதியபுல விப்புலவி யால்
மொய்பா சறைக்களத் தாடவர் அகப்பட்ட
எத்திசை முத்தும்அமை யச்

சிலைக்கா மரங்கள் முழக்குவய லூரனே
சிறுபறை முழக்கிஅரு ளே
தென்இலஞ் சிப்பதிப் பன்னிருகை மேகமே
சிறுபறை முழக்கிஅரு ளே.

(அ - ரை.) காந்தள் அம்கை - காந்தள் மலர் போன்ற அழகிய கை. கொவ்வை - கோவைப்பழம் போன்ற. கூர்-கூர்மை. கொடி - ஒழுங்கு. தபனமண்டலம் - சூரியமண்டலம். புலவி - ஊடல். பாசறைக் களம் - படைவீடு. சிலைக்காமரங்கள் - ஒலிக் கின்ற வண்டுகள்.

முதலடியில் புணர்ச்சிக்காலத்து நிகழும் மெய் வேறுபாடுகள் கூறப்பட்டன. (அ௫)

கந்தர முழக்கமும் கந்தரத் திடைபுக்க
கண்டீர்வப் பெருமுழக் கும்
கதிர்இளம் திங்கள்அம் கண்ணியனை முன்னிக்
கடிந்தோர் இயற்றுவேள் வி

மந்தர முழக்கமும் சுனைஆடு கன்னியர்
வளம்கெழு முழக்கங் களும்
மடப்பிடி நடைச்சிறு கொடிச்சியர் குழாம்கூடி
மன்றல்அங் குன்றம்எதிர் கூம்

சுந்தர முழக்கமும் வெறியாட்டு முருகியம்
துவைப்படு முழக்கங்களும்
தும்பிக்கை நீர்தூம் துருத்தியென் றருவித்
தடாகம் துதைந்த குளிரும்

சிந்துர முழக்கமும் தீராத தமிழ்வெற்ப
சிறுபறை முழக்கிஅரு ளே
தென்இலஞ் சிப்பதிப் பன்னிருகை மேகமே
சிறுபறை முழக்கிஅரு ளே.

(அ - ரை.) கந்தரம் - மேகம். கந்தரத்திடைபுக்க கண்டீர வம் - மலைக் குகையிடைடைத்துப் புகுந்த சிங்கம் அல்லது புலி. முன்னி - நினைத்து. கடிந்தோர் - வெறுத்தோர். சுனைஆடு-சுனையில் நீராடு. கொடிச்சியர்குழாம்-குறிஞ்சிநிலப் பெண்கள் கூட்டம். எதிர்கூஉம் - எதிர் ஒலிக்கும். வெறியாட்டு முருகுஇயம் - வெறியாடல் காலத்து முருகனைக் குறித்து முழக்கப்படும் வாத்தியம். நீர்தூம் - நீரைத் தூவும். துதைந்த - நெருங்கிய. சிந்துரம்-யானை. குளிறும் - பேர்ஒலியும். செய்யுளில் பல்வகை முழக்கங்களும் குறிக்கப்பட்டன. பலவகை முழக்கங்களும் நிறைந்த தமிழ்மலையில் எழுந்தருளிய பெருமானே அம்முழக்கங்களோடு நீ சிறுபறையையும் முழக்கிப் பெருமுழக்கஞ் செய்வாயாக. (அசு)

சாவதும் திரியப் பிறப்பதும் தொடராது
தண்அளி சுரந்தபெரு மான்
சயிலத் தடஞ்சாரல் புக்குநின் றேக்கறும்
சமயத்தில் வந்துதோன் றி

ஏவதும் கொண்டுட்பு லம்புவதும் நனிதீர்மின்
என்னும் குறிப்புமொழி தந்
தேந்தும் குறுந்தொடி அரற்றவெற் றிப்பறை
எறிதனின் இச்சூர னைக்

காவதம் பலகோடி ஓடினும் ஒறுப்பன்
கருங்கழற் கச்சுவீக் கிக்
கைவேலும் ஏந்தினன் காண்மின்கள் என்றுபல
கடவுளர்பொன் மலர்மழையொ டும்

தேவதுந் துபிஒரு புறத்தினின் முழக்கநீ
சிறுபறை முழக்கிஅரு ளே
தென்இலஞ் சிப்பதிப் பன்னிருகை மேகமே
சிறுபறை முழக்கிஅரு ளே.

(அ - ரை.) தொடாாது - தொடாமல். தண்அளி - இன் அருள். ஏக்கறும் - தாழ்ந்து நிற்கும்; தலைகுனிந்தும், ஒறுப்பன் - தண்டிப்பன். பறை எறிதல் - பறை முழக்குதல். காவதம் - பத்து மைல். (அ௭)

வெங்கண் சிவந்துடல் குறுக்கிவயி றெக்கிநெடு
வெடிவால் முறுக்கி நோக்கி
விண்ணுடு நமனுள் வெரூஉக்கொள வெகுண்டண்ட
கோளமும் வெடிப்ப உதறிப்

பங்கம் படுக்குமதக் களிறலறி வீழ்ந்துழப்
பப்பாய்ந் தடித்து டைத்துப்
பருமத் தகம்பிளந் தீர்ங்கோட்டு வெண்தரள
பந்திசிந் தித்தெ றிப்பப்

பொங்குங் கடற்குருதி புழைபடுங் கைமடைப்
புகர்முகர் துறைமடுத் தோர்
பொற்றையிற் சுற்றுங் குலிங்கம் குறிக்கொளப்
போந்துகடை வாய்தடவி வெண்

சிங்கம் தியங்கும்வரை செல்வமுத லாளியே
சிறுபறை முழக்கி அருளே
தென்இலஞ் சிப்பதிப் பன்னிருகை மேகமே
சிறுபறை முழக்கி அருளே.

(அ - ரை.) நமனுள் - எமனுடைய தூதர். எக்கி - வற்றச் செய்து. பங்கம் படுக்கும் - குறைவு உண்டாக்கும். தாளபந்தி -

முத்துவரிசை. புழைப் படுங்கை - தும்பிக்கை. பொற்றை - பாறை, மலை. தியங்கும் - திகைக்கும். (அஅ)

முறுகிக் கதிர்க்கும் செருத்தற் பகட்டெருமை
மோட்டுவெங் கோட்டுநுதி யால்
முள்வேலி கோலிக் குறுங்கால் நறுங்குவளை
முருகுசித றப்பெ யர்த்துக்

குறுகிக் கருப்பங் குருத்தைக் கறித்துக்
குதட்டிக் குதட்டி மேய்ந்து
கொழுமலர்த் தேன்ஊற விரவிவரு புனலுண்டு
குறுநடை பயின்று மறுகி

மறுகிற் புகுந்துபணை மருதநிழ லில்தூங்கி
மாங்கனி படைப்ப வாங்கி
வாங்கிச் சுழிப்புறத் துண்என் றெழுந்துதன்
மழக்கன்றி னுக்கி ரங்கிச்

சிறுகக் கனைத்துவரு தென்ஆரி நன்னாடை
சிறுபறை முழக்கி அருளே
தென்இலஞ் சிப்பதிப் பன்னிருகை மேகமே
சிறுபறை முழக்கி அருளே.

(அ - ரை.) செருத்தல் - மடி. மோட்டுவெங்கோட்டு - உச்சியிலுள்ள கொடிய கொம்பில். முருகு-வாசனை. கருப்பங்குருத்தை-கரும்புக் குருத்தை. கறித்து - கடித்து. குதட்டி - மென்று. மறுகி - மயங்கி. மறுகில் - தெருவில். மழக்கன்று - இளங்கன்று. (அகூ)

கைத்தலை வைத்த விருப்புடன் அற்பர்
கடைத்தலை தொறும்உ ழல்வோர்
கற்றச ரக்கை விலைச்செயும் அற்ப
கவித்துவம் இழிவெனவே

யிற்றலை பத்ம பதத்தை வழுத்தும்
எனக்கருள் புரிகுவைநீ
எய்த்தவ ருக்கும் இளைத்தவ ருக்கும்
இரக்கம துடையவன்நீ

நத்தலே சித்ரந தித்தலே நிற்கும்
நடைப்பிடி தருமகன்நீ
நச்சர வத்தில் நடித்தருள்பச்சைமு
கிற்கொரு மருமகன்நீ

முத்தலே யத்ரன் அளித்தருள் புத்திரன்
முழக்குக சிறுபறையே
முக்குடு மிக்கிரி யிற்கும ரப்பன்
முழக்குக சிறுபறையே.

(அ - ரை.) விலேசெயும் - விலே செய்கின்ற. நத்து அலே - சங்குகள் அலேகின்ற. நடைப்பிடி - நடையிற் பெண் யானே போன்ற உமா தேவி. பச்சை முகில் - பச்சை மேகம்போன்ற திருமால். (கூ0)

அகத்தினில் நினேப்பவர் பிறப்பையும் இறப்பையும்
அகற்றிடும் அருள் மலேயே
அகத்தியன் வழுத்திட இலக்கண இலக்கியம்
அமைத்தருள் குருபரனே

பகைத்திறம் ஒடுக்கிஎன் மனத்திடை அருட்கதிர்
பரப்பிய படர் ஒளியே
படைப்பவன் முடித்தலே புடைத்துல கினேத்தனி
படைத்திடும் இறையவனே

நிகழ்த்திய படிக்கித சுகத்தினில் எனத்தொழில்
நிரப்பிய நிருமலனே
நினேப்பொடு மறப்புவி கற்பவி கற்பமும்
நிறுத்திடு நியதிஉளாய்

முகிழ்த்தபு னகைச்சிறு குறத்தியொ டிருப்பவன்
முழக்குக சிறுபறையே
முதற்பிறை நுதற்குழல் மொழிக்கொரு மழக்குக
முழக்குக சிறுபறையே.

(அ - ரை.) அகம் - மனம். திறம் - வகை. புடைத்து - தாக்கி. நியதி - முறை. புன்னகை - புன்சிரிப்பு. (கூக)

இதயமணி முத்தம்நிறை சததள மலர்த்தவிசின்
இடைஒரு கிழத்திபயில் வாள்
எறிகடல் முகட்டில்எழு தினகர ரவிப்பிரபை
யிற்காட்சி நற்ப்ரபையும் ஆய்

உதயகிரி அத்தமன கிரிகள்என மிக்குயரும்
உபயபுய வெற்பின்மிசை போய்
ஒளிர்பணில சக்ரநில வொருபுடை எறிப்பவெயில்
ஒருபுடை எறிப்பமலர் மேல்

மதலைஎழும் அச்சுழியில் எழுபுவி படைப்பவரும்
மரகத மணிக்குவடு போல்
வரிஅர வணைக்குள்விழி வளரும்ஒரு பச்சைமுகில்
மருமகன் ஒருத்திகுற மான்

திதலைமுலை யிற்களப மெழுகிடு திருக்கைகொடு
சிறுபறை முழக்கி அருளே
திரிகுடுமி வெற்புடைய குழல்மொழி திருக்குமர
சிறுபறை முழக்கி அருளே.

(அ - ரை.) இதயம் - உள்ளிடம். சததளம் - நூறு இதழ். தவிசினிடை - இருக்கையில். உபயபுயவெற்பு - இரண்டு தோள் மலைகள். மதலை - குழந்தை. மரகதமணிக்குவடு - பச்சை மாணிக்கச் சிகரம். வரி அரவணைக்குள் - பாம்புப் படுக்கையில். திதலை - சுணங்கு, தேமல். களபம் - சந்தனம். திரிகுடுமி வெற்பு - திரிகூடமலை. (கஉ)

இடைச்சியர் புனை துகில் எடுத்தொரு தருவினில்
இருப்பவன் மருமகனே
இருட்டுறை உழும்இள முலைக்கும ரியும்என
இலக்கினில் வருபவனே

படைப்பவர் தொகுதிகள் படைப்பவன் எனும்இறை
பழிச்சிய பழையவனே
பகுத்திடு பலகலை தொகுத்திடு நிலைபெறு
பரப்ரம ஒளிஉருவே

உடைத்தெழு மதசலம் உவட்டெழு கயமுக
ஒருத்தர்பின் வருபவனே
உருத்திர பசுபதி எனத்தொழு மறையவர்
உளத்திலும் உறைபவனே

முடித்தலை இமையவர் கெடித்தலம் உரியவ
முழக்குக சிறுபறையே
முடப்பல வடியினில் முளைத்தவன் மழவிடை
முழக்குக சிறுபறையே.

(அ - ரை.) தரு - மரம். இலக்கு - குறி. பழிச்சிய - போற்றிய. ஒளிஉருவே - சோதி வடிவே. மதசலம் உவட்டு எழு - மதநீர் பெருகி வடிகின்ற. கயமுக - யானைமுகம். முடப்பல வடியினில் முளைத்தவன் - வளைந்த குறும்பலா அடியில் தோன்றிய சிவபெருமான். மழவிடை - இளங்காளை போன்றவனே. (கரு)

கo. சிறுதேர்ப்பருவம்

வெண்டேர் உருட்டிவரும் வேதாளம் இட்டஅடி
பாதாளம் முட்டவிரவும்
வீரசக்ராயுதப் பகழியும் புட்டிலும்
வெரிங்கொண் டெருத்தலைப்ப

மொண்டேர் உருட்டிவைத் தால்அனைய நவரத்ந
முடிமுக டளாவிநிற்கும்
மூதண்ட வேதண்ட கோதண்ட கணபண
முடிஅராச் சிறுநாண்எறிந்

தொண்டேர் உருட்டிவரு சேட்டிளம் பரிதிமதி
உபயசக் கரங்களாக
உபநிடப் பரிபூட்டி முப்புரம் கனலிகூட்
டுண்ணவான் தரணிவட்டத்

திண்டேர் உருட்டும்ஒரு சேவகன் திருமதலை
சிறுதேர் உருட்டிஅருளே
செந்தமிழ் இலஞ்சிநகர் வந்தகந் தசுவாமி
சிறுதேர் உருட்டிஅருளே.

(அ - ரை.) சிறுதேர்ப் பருவம் ஆவது: சிறுதேர் என்னும் நடைவண்டி உருட்டி மகிழ்தல். இஃது இருபத்தொன்றாந் திங்களில் நிகழ்வது- பாதாளம் முட்ட - பாதாளம் வரை. பகழியும் புட்டிலும் - அம்பும் அம்பறாத் தூணியும். வெரிந்-முதுகு. எருத்து அலைப்ப - பிடரியை வருத்த. மூதண்ட - பழையலோகம். வேதண்டம் - மலை. கோதண்டம் - வில். கணபண முடி - திரண்ட முடிகள். ஒண்டேர் - ஒள்ளிய தேர். பரிதிமதி - சூரிய சந்திரர். உபய சங்கரங்களாக - இரண்டு வட்டுக்களாக. திண்டேர் - வலிய நிலமாகிய தேர். சேவகன் - வீரன்.

(கூசு)

மன்றற் கருங்குழற் செய்யவாய் வெண்ணகை
வளர்க்குங் கலாபமயில் போல்
மடப்பிடி நடைச்சியர் கொடிப்படை எடுப்பநெடு
வான்மதிக் குடைகவிப்ப

அன்றிற் கருங்கா ளங்கறங் கா நிற்ப
அதிர்கடல்மும் முரசம்ஆர்ப்ப
அலைப்பல கையும்துயில் கொளுங்கங்குற் கடாயானை
அழிமதக் கலுழிகொட்பக்

குன்றிற் பணைத்தகுவ வுத் தடந் தோள்மதன்
கோலம் சமைந்துகன்னல்
கோதண்டம் ஏந்திக் குறும்பெறி சனற்கிளிக்
கொய்உளைப் புரவிபூட்டும்

தென்றற் றடந்தேர் உருட்டும் பரங்கிரிய
சிறுதேர் உருட்டிஅருளே.
செந்தமிழ் இலஞ்சிநகர் வந்தகந் தசுவாமி
சிறுதேர் உருட்டிஅருளே.

(அ - ரை.) மன்றல் - மணம். மடப்பிடி - இளைய பெண் யானை. வான்மதிக்கொடை - உயர்ந்த சந்திரனுகிய குடையைப் பிடிக்க. அன்றிற்கருங்காகளம் - அன்றிலாகிய கரிய எக்காளம். கறங்கா நிற்ப - ஒலிக்க. அலைப்பலகை - அலையாகிய பலகையும். கங்குற் கடாயானை - இருளாகிய மதயானை. கலுழி - பெருக்கு. கொட்ப - சுழல. குன்றிற் பணைத்த - சிறுமலைபோல் பருத்த. குவவு - திரட்சி. கோல் ஐந்து - ஐவகை மலர் அம்பு. கன்னற் கோதண்டம் - கருப்பு வில். பரங்கிரிய - திருப்பரங்குன்றிலுள்ளவனே! செய்யவாய் வெண்ணகை; முரண்தொடை. தோள் பருத்திருத்தல் ஆடவர்கட்குச் சிறப்பாகையால், "குன்றிற் பணைத்த குவவுத்தடந்தோள்" என்றார். (கூ)

தூங்குங் கமஞ்சூற் கருங்கொண்டல் மஞ்சுகண்
துஞ்சும் தடஞ்சாரலில்
சுழல்கின்ற பைங்கண் கரும்பொரைச் செக்கர்வாய்ச்
சூர்உகிர்ப் போர்வேங்கையும்

தாங்குஞ் சிவப்புண்ணி வெள்ளிக் குழற்படி
சாரங்க பந்தாள மும்
தங்களில் பகைமைதீர்ந் தொருதுறைப் புனலுண்டு
சஞ்சரிக் குந்த்ரிகூடப்

பூங்குங் குமக்குவட் டடவிக் கொடிச்சியர்
புனத்திதழ் அமைத்ததுருமப்
புதுவெள்ளம் எறியச் செறித்தபால் முத்தனூர்
புலவியிற் கொழுநர்பதிபோல்

தேங்குதோ றும்பரவு சித்ரா நதிக்கிறைவ
சிறுதேர் உருட்டிஅருளே
செந்தமிழ் இலஞ்சிநகர் வந்தகந் தசுவாமி
சிறுதேர் உருட்டிஅருளே.

(அ - ரை.) தூங்கும் - தங்கும், தொங்கும். கமஞ்சூற் கருங் கொண்டல் - சிறந்த சூலைக்கொண்ட கரிய மேகம். துஞ்சும் - தூங் கும். செக்கர் - சிவப்பு. சூர் - அச்சம். வேங்கை - புலி. குவடு - முடி, சிகரம். துருமம் - குங்குமம். சித்திரா நதிக்கு இறைவா - சிற்றாறு என்னும் சித்ரா நதித் தலைவா. (கூசு)

இருவிரலின் நீளத்தில் ஒருவிரலின் ஆழத்தில்
இட்டஒரு களம்நிரைத்த
ஈர்ம்பள்ளை யாட்டின் மயிர்த்தொகை பல்லம்என்
றெண்ணுங் கணக்கின்வகை போல்

ஒருபெருங் களிறும்ஓர் பெருந்தேரும் வெம்படை
உழவர்ஐ வரும்கவின்றம
ஒருநான்கும் ஆகிய பதாதிமுதல் மும்மடித்
தோங்குசே னைமுகமும்மேல்

மருவிடும் கும்பியும் கண்டமும் வாகினியும்
மன்உயிர் தனையும்அப்பால்
வாய்த்தசமு கமுமனிக முங்கடந் தக்ரோணி
மாசேனை நெளியவிசையன்

செருவலித் திண்தேர் உருட்டும் பிரான்மருக
சிறுதேர் உருட்டிஅருளே
செந்தமிழ் இலஞ்சிநகர் வந்தகந் தசுவாமி
சிறுதேர் உருட்டிஅருளே.

(அ - ரை.) களம் - கண்டம். பள்ளை யாட்டின் - வயிறு பருத்த வெள்ளாடு. பல்லம் - அம்பு. ஒரு பெருங் களிறு......

சேனுமுகமும் - இதில் கரி, பரி, தேர், கால் ஆள் ஆகிய நாற்படைகளும் குறிக்கப்பட்டுள்ளன. அனிகம் - படை. அக்ரோணி - உகஅஎ0 யானையும், சூ௵கூக0 குதிரையும், உகஅஎ0 தேரும், க0கூந௵0 கொண்ட ஒரு சேனைத்தொகை. செரு - போர். பிரான் - திருமால். (கூஎ)

எண்ணெய்க் குடங்கள்என் றிறுமாந்து நீலவடம்
ஏந்திள முலைக்கடைசி மார்
எடுத்துக் குடத்தொடும் அடுத்தநற வங்குரவை
இடுசெருக் கிற்கவிழ்த்த
பண்ணைச் செதும்பில்விளை யாடுங் கருஞ்சிறூர்
பற்றும்வாற் செங்கன் று போய்ப்
பாய்ந்திடு முட்பல வடிக்குடக் கனிசிதறு
படுபழச் சேதகத் தின்
மொண்ணைக் கரும்பக டுரிஞ்சுகுலை வாழையின்
முப்பழச் சேறிழிந் து
மொய்என்று படுசேற்றில் வாய்த்தசெஞ் சாலிசொரி
முத்தைவா ரிக்குவித் த
திண்ணைக்கு வெண்ணில வெறிக்கும் பிரானூர
சிறுதேர் உருட்டிஅரு ளே
செந்தமிழ் இலஞ்சிநகர் வந்தகந் தசுவாமி
சிறுதேர் உருட்டிஅரு ளே.

(அ - ரை.) நீலவடம் - நீல மாலை. கடைசிமார் - பள்ளியர். நறவம் - கள். செருக்கு - களிப்பு. பண்ணைச்செதும்பு - வயற் சேற்றில், குரவை இடு - குரவை ஒலியிடுகின்ற. வாற்செங்கன்று - வாலையுடைய ஆன் கன்று. முள்பல அடிக்குடக்கனி - முள்ளை யுடைய பலா மரத்தின் அடியிலுள்ள குடம்போன்ற பலாப்பழம். சேதகம் - செஞ்சேறு. மொண்ணை - பருத்த. கரும்பகடு - எருமைக் கடா. திண்ணைக்கு - திண்ணையில். (கூஅ)

இரைக்கும் சுரும்பருக் குங்குமக் கோடிடறி
இபநெடுங் கோடு சாடி
இல்லக் கொடிச்சியரின் இதயப் புனத்திதண்
ஏற்றிப் பளிக்கறையில்இட்

டரைக்கும் செழுஞ்சாந்தொ டகில்முரு டுருட்டிநெட்
டரவுமிழும் மணிவரன்றி
அண்டர்அண் டங்களும் அளக்கும்நெடு மூங்கில்முத்
தரியிட் டரித்துவிரவிக்

கரைமிருக மதகலவை துன்றுசிவ மதுகங்கை
செண்பகக் காடுபொங் கு
கடல்கடந் தருவித் தடாகம் கடந்திரு
கரைக்குறும் பெறிய மோதித்

திரைக்கும் திரைப்புனற் சித்ரா நதிக்கிறைவ
சிறுதேர் உருட்டிஅருளே
செந்தமிழ் இலஞ்சிநகர் வந்தகந் தசுவாமி
சிறுதேர் உருட்டிஅருளே.

(அ - ரை.) சுரும்பு - வண்டு. கோடு - கொம்பு. இதயப் புனத்து - மனக்காட்டில். இதண் - பரண். அகில் முருடு - அகில் கட்டை. அரவு உமிழும் மணி - பாம்பு உமிழுகின்ற இரத்தினத்தை அள்ளி. மிருகமதகலவை - கத்தூரிக் கலவை. துன்று - பொருந்திய. திரைக்கும் - மடங்கும். குறும்பு - அரண். (கூகூ)

கம்பவள வாரணக் கடல்வந் திரங்கக்
கறங்குந் திரைக்கானல் வாய்க்
கரியசிறு முட்கவிழ் மடக்கிலே முடக்கேத
கைக்காவின் விழுதுபற் றி

வம்பவிழும் வெண்மடல் தலேமிசை படர்ந்தோடி
மணற்குன்று தன்னைமூடி
மதுமலர்ப் புன்னைக் கருங்கோ டுலாயதன்
மருங்கோ டொருங்கோடியே

கும்பவள மென்முலைக் கடைசியர் குழாம்பயில்
கொழும்பணைக் கதலிநுதலிக்
கொல்லைக் குருந்தேறி முல்லையொடு பின்னிக்
குறிஞ்சிக் கவட்டினும் போய்ச்

செம்பவள வல்லிபடர் தென்குமரி வளநாட
சிறுதேர் உருட்டி அருளே
செந்தமிழ் இலஞ்சிநகர் வந்தகந் தசுவாமி
சிறுதேர் உருட்டி அருளே.

(அ - ரை.) இரங்கக்கறங்கும் - இரங்கும்படி ஒலிக்கும். கேதகைக்கா - தாழஞ்சோலை. மருங்கோடி ஒருங்கோடி - பக்கத்தில் ஒருசேர ஓடி. கும்பம் - குடம். நுதலி - சொல்லி. (க00)

மகவான் மனைக்கிறைவி மகராசி பெற்றமகள்
மயில்போல் இருக்கஅயல் போய்
மகடூஉ ஒருத்திமிகு முகடூ டளக்குமலை
விளைகாவ லுக்குவரு வாள்

முகலா ளிதத்தரள முகிழ்மூர லுக்குருகி
முனைவேல் எடுத்துவரு வாய்
முருகா மருத்துழவன் மருகா திருத்தணியில்
முதல்வா ஒருத்திபுதல் வா

உகளா முயற்பிறையை முடிமேல் முடிக்கும்எமை
உடையான் வலச்செவியிலே
உறைவான் உரைபபரிய ஒருதா ரகப்பிரம
உபதேசம் வைத்தகுருவே

சிகரா சலத்தில்உயர் திரிகூட வெற்பன்ஒரு
சிறுதேர் உருட்டிஅரு ளே
செந்தமிழ் இலஞ்சிநகர் வந்தகந் தசுவாமி
சிறுதேர் உருட்டிஅரு ளே.

(அ - ரை.) மகவான் - இந்திரன். மகள் - தெய்வயானை. மகடூஉ-பெண். முகடூடளக்கு மலை-வானளாவியமலை. விளைகாவல் - விளைகின்ற தினைப்புனத்திற்கு காவலாக. லாளிதம் - அழகு. தரள முகிழ்மூரலுக்கு - முத்துப்போல் குவிந்திருக்கின்ற பல்லின் நகைக்கு மருத்துழவன் - மணம் பொருந்திய துழப மாலையை அணிந்த கண்ணன். உகளாமுயல் - தாவாத முயல் இது பாயா வேங்கை போன்ற குறிப்பு மொழி எமை உடையான் - எங்களை ஆளுதல் உடையவனாகிய சிவபெருமான். தாரகப்பிரம உபதேசம்-

ஓங்காரமாகிய பிரணவப்பொருள் உண்மை. சிகராசலம் - குடுமி மலை. (க0க)

பணிகொண்ட தாரைகன் மணித்தேரும் அர்ச்சுனன்
பாழித் தடந்தேரு மே
பருவமும் செல்வதில ஒருபெருஞ் சேடனே
பரூஉச்சுடிகை நெற்றிமுற்றத்

தணிகொண்ட கல்லோல வரதமனே கரமேக
லாபார மணிநெடுந் தேர்
அன்றே நடக்குநில நின்றுதை நகைசெய்வ
தாழியொன் றுதவன் றேர்

கணிகொண்ட வையமும் காண்பதிற் கங்குலில்
காமன் கறங்குபொற் றேர்
காற்றேர்அ லாதில்லை மேல்தேர் உரைப்பதென்
கவனவாம் புரவியின் மேல்

திணிகொண்ட செல்வஉன் தேர்அலா தில்லையால்
சிறுதேர் உருட்டிஅரு ளே
செந்தமிழ் இலஞ்சிநகர் வந்தகந் தசுவாமி
சிறுதேர் உருட்டிஅரு ளே.

(அ - ரை.) பாழி-வலி. பரூஉச்சுடிகை-பருத்த கொண்டை. கணி - மதிப்பு. காற்றேர் - காற்றாகிய தேர். கவனவாம்புரவி - வேகத்துடன் தாவுகின்ற குதிரை. (கOஉ)

மருள்வந்த பிறவிக் கடற்படிந் துள்ஆசை
மகரம் புடைத்தடிப்ப
மாள்கின்ற சிற்றுயிர்க் குற்றிடத் துதவிசெய்
வருமரக் கலமேமுகன்

தருள்வந்த மெய்அன்பர் ஆர்வம் தழைக்கின்ற
அகநெக்கு நெக்குருகி னே
ஞானமுகன் நனவினுக் கெதிரிட் டுவட்டெறியும்
ஆனந்த மாப்பெருக் கே

பொருள்வந்த கடவுட் பழம்பாடல் ஏந்தும்ஒரு
பொன்மாளி கைக்குள்வைத்த
புனைமணி விளக்கமே அநுபூதி தந்துபர
போகம்விளை கின்றவிளைவே

தெருள்வந்த மணிமன்றம் உடையவன் செல்வமே
சிறுதேர் உருட்டிஅருளே
செந்தமிழ் இலஞ்சிநகர் வந்தகந் தசுவாமி
சிறுதேர் உருட்டிஅருளே.

(அ - ரை.) மருள்வந்த - மயக்கமுற்ற. படிந்து - மூழ்கி. ஆசை மகரம் - ஆசையாகிய மகரமீன். ஆர்வம் - அன்பு. நெக்கு நெக்குருகி - மிகநெகிழ்ந்து உருகி. அநுபூதி - அழுந்தி அறிந் துணர்ந்த அறிவு. தெருள்வந்த - அறிவுற்ற, தெளிவுற்ற. (கoரு)

திருவிலஞ்சி முருகன் பிள்ளைத்தமிழ்

முற்றிற்று.

பொருட் குறிப்புக்கள்

[எண் : செய்யுள் எண்]

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	26	விநாயகர் கற்பமர்	விநாயகர்க் கற்பமர்
4	26	கற்பமர்	அற்பமர்
35	25	திருக்ற்றாலத்துத்	திருக்குற்றாலத்துத்
38	25	முன்னர்க	முன்னர்க்
44	16	சுடற்வேற்	சுடர் வேற்
55	24	இடையேம் தாணி	இடையேம தாணி
64	11	செச்சை மகள்	செச்சை மலர்